விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 099 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 14 புதன்கிழமை (27.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## சுமார் 64 பொருட்களுக்கான விசேட வர்த்தக வரி நீக்கம்

### அமைச்சரவையும் அங்கீகாரம்

(கொழும்பு)

சுமார் 64 பொருட்களுக்கு விதிக்கப்பட்ட விசேட வர்த்தக வரியை இடைநிறுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.


இந்த வரியை அமுல்படுத்தும் போது ஏற்பட்டுள்ள பல்வேறு சிக்கல்கள் காரணமாக சட்டத்தை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

210 HS குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட 64 வகையான பொருட்கள் இதில் அடங்கும். (ம-7,10)

### முருகன், ஜெயக்குமார், றொபேர்ட் பயஸுக்கு

## கடவுச்சீட்டு வழங்கப்பட்டது

### விரைவில் இலங்கை வருவார்கள்





15

### வடக்குக் கிழக்கு மாகாணங்களில்

# வழிபாட்டுத் தலங்களை இலக்கு வைத்து நில அபகரிப்பு

### பிரிட்டனின் பொதுநலவாய, அபிவிருத்தி அலுவலகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வழிபாட்டுத் தலங்களை இலக்கு வைத்து நிகழும் நில அபகரிப்புகள் சமூகங்களுக்கு இடையில் பதற்றத்தை தோற்றுவித்துள்ளன என பிரிட்டனின் பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம் தெரிவித்துள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் மேலும் இரு புதிய சட்டங்கள்

(கொழும்பு)

டிஜிட்டல் பரிவர்த்தனை நிறுவனம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மையம் ஆகியவற்றை நாட்டில் நிறுவுவதற்கு தேவையான சட்டங்கள் இந்த ஆண்டு நடுப்பகுதிக்குள் பாராளுமன்றத்

02

## கீரிமலையில் காணி சுவீகரிப்பு

### மக்கள் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தம்

(06ஆம் பக்கம் பார்க்க)

## அக்குபஞ்சர் சிகிச்சை யாழில் ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தவறான அக்குபஞ்சர் சிகிச்சை முறையால் யாழில் ஒருவர் உயிரிந்துள்ளார்.

அச்சுவேலி கிழக்கை சேர்ந்த மாணிக்கம் சற்குண ராஜா (வயது-64) என்பவரே நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

முழங்கால்வலியினால் அவதிப்பட்டு வந்தவர் யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள அக்குபஞ்சர் சிகிச்சை நிலையத்துக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளார்.

அங்கு முழங்கால்

15

## அரசின் செயற்பாடு எப்போதும் மனித உரிமை மீறலாக அமையாது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மனித உரிமை மீறலாக அமையாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்

16



## தொழிலாளர்களின் ஊதியத்தை 40 வீதமாக அதிகரிக்க அனுமதி

### நாளாந்த சம்பளம் 200 ரூபாயால் அதிகரிப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் இலங்கையில் பொருளாதாரம் கட்டியெழுப்பப்படும் நிலையில், தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை 40 வீதமாக அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது; அதன் அந்நியச் செலாவணி கையிருப்பு மிகக் குறைந்த அளவிற்கு வீழ்ச்சியடைந்தது.

இந்நிலையில், வறுமையில் சிக்கியுள்ள மக்களுக்கு ஆதரவளிக்

02

### மீசாலையில் விபத்து

## இளம் குடும்பஸ்தர் ஸ்தலத்தில் மரணம்

(சாவகச்சேரி)

மீசாலை புத்தூர்ச் சந்திப் பகுதிக்கு அணமித்த ஏ9 வீதியில் இடபெற்ற வீதி விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 10 மணியளவில் இவ்விபத்து

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடுக்குநாறிமலை அராஜகம்

# கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்தில் முறைப்பாடு

(கொழும்பு)

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கைதான எட்டுப்பேரில் 6 பேர் நேற்று கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைக் காரியாலயத்தில் முறைப்பாடுகளை மேற்கொண்டனர்.

கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகத்தில் மனித உரிமை விவகாரங்களுக்குப் பொறுப்பான அதுகாரியுடன் நேரில் சந்தித்து சிவராத்திரி தினத்தில் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பொலிஸார் மேற்கொண்ட அராஜகங்கள் மற்றும் கைதுகள் துன்புறுத்தல்கள் அடிப்படை வசதிகளற்ற சிறையில் அடைத்து வைக்கப்பட்டமை தொடர்பில் எடுத்துக் கூறப்பட்டது.




மேலும் வவுனியா மனித உரிமை கள் ஆணைக்குழு ஆணையாளரது பக்கச் சார்பானதும் நம்பகமற்றதுமான செயற்பாடுகள் சுட்டிக் காட்டப்பட்டதுடன் அதிகாரத் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட பொலிஸார் மீது குற்றவியல் நடவடிக்கை எடுத்துத் தண்டிக்க வேண்டும் எதிர்காலத்தில் இடையூறுகள் இன்றி ஆலய வழிபாடுகளில் ஈடுபடுவதற்கான சூழல் உறுதிப்படுத்தப்படல் வேண்டுமெனவும் கோரி மகஜர் ஒன்றும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் நேற்று கையளிக்கப்பட்டது. (ம-7,10,299)

## வழிபாட்டுத்...

பிரிட்டனின் பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தினால் கடந்த ஆண்டு ஜூலை மாதம் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக அறிக்கை வெளியிடப்பட்டது.

அவ்வறிக்கை குறிப்பாக மனித உரிமைகள் அல்லது ஜனநாயக ரீதியிலான சவால்களுக்கு முகங்கொடுத்திருக்கும் 32 நாடுகளைப் பட்டியலிட்டிருந்தது. அதன்படி 2023 ஆம் ஆண்டு ஜனவரி 1 - ஜூன் 30 வரையான 6 மாத காலப்பகுதியில் அந்த 32 நாடுகளின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக நிலைவரம் தொடர்பில் ஆராய்ந்து வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையிலேயே பிரிட்டன் பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது.

புதுப்பிக்கப்பட்ட அவ்வறிக்கையில் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக நிலைவரம் தொடர்பில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்ந்தும் கரிசனைக்குரியதாகவே காணப்படுகின்றது. தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்வதை முன்னிறுத்திய பல்வேறு முயற்சிகளுக்கு மத்தியிலும், அச்சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்படுவதுடன் கருத்து வெளிப்பாடு மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் ஏனைய சட்டங்களும் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

அதேபோன்று அமைதியான முறையில் நடத்தப்பட்ட போராட்டங்கள் மற்றும் நினைவுகூரல் நிகழ்வுகள் கடுமையான முறையில் அடக்கப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

அதேபோன்று நாட்டின் வட, கிழக்கு மாகாணங்களில் வாழும் சமூகங்கள் பாதுகாப்புத் தரப்பினரின் தொடர் கண்காணிப்புக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் முகங்கொடுத்து வருகின்றன.

அதுமாத்திரமன்றி அப்பகுதிகளில் கரிசனைக்குரிய மட்டத்தில் காணி அபகரிப்புக்கள் அதிகரித்து வருவதுடன், சிலவேளைகளில் அவை மத வழிபாட்டுத்தலங்களை இலக்குவைத்தவையாகக் காணப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் சமூகங்களுக்கு இடையில் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளன.

உண்மை மற்றும் நல்லிணக்க விவகாரத்தில் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கான கடப்பாட்டை இலங்கை கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதெனினும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்கள் எவையும் 2023 ஜூன் மாதமளவில் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் நாம் சமர்ப்பித்த அறிக்கையில் யுத்தத்துக்கும், தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்குக்கும் வழிவகுத்த அடிப்படைக் காரணிகளைக் கண்டறிந்து களைவதற்குரிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், அனைவரையும் உள்ளடக்கிய தன்மை என்பன பேணப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தோம் என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(ம-7,10)

## தொழி...

கும் வகையில் குறைந்தபட்ச ஊதியத்தை 12,500 ரூபாயில் இருந்து 17,500 ரூபாயாக மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது... அமைச்சர

வைப் பேச்சாளரும் போக்குவரத்து அமைச்சருமான பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

இது மிகவும் முக்கியமான முடிவு. இதன் கீழ் தேசிய நாளாந்த ஊதியமும் 200 ரூபாயால் அதிகரிக்கப்படும் என்று அவர் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

மக்கள் தொகையில் 20 வீதமான ஏழை மக்களின் சராசரி மாத வருமானம் 17,572 ரூபாய் ஆகும்.

அதேசமயம் ஒட்டுமொத்த குடும்பங்களில் 90 வீதம் பேர் நெருக்கடியின் காரணமாக தங்கள் செலவினங்களை அதிகரித்துள்ளனர் என்று சமீபத்திய அரசாங்கத் தரவுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர் திட்டத்தின் உதவியால் இலங்கையின் பொருளாதாரம் மெதுவாக நிலைபெறுவதுடன், கடந்த பெப்ரவரியில் பணவீக்கம் 70 வீதத்தில் இருந்து 5.9 வீதமாக குறைந்துள்ளது.

எனினும், எரிபொருள் விலையேற்றம் மற்றும் கடந்த ஜனவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட மூன்று வீத வற் வரி திருத்தம் என்பன வாழ்க்கைச் செலவை உயர்த்தியுள்ளதுடன் நாட்டு மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பல்கலைக்கழக மாணவர்களும் தொழிற்சங்கங்களும் அரசாங்கத்தின் வரி மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலையை குறைக்கக் கோரி பல மாதங்களாக போராட்டங்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## நாட்டில்...

தில் சமர்ப்பிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நடைபெற்ற டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு வசதிகள் மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்திய உயர்ஸ்தானிகராலயமும் இலங்கை அரசாங்கத்தின் தொழில்நுட்ப அமைச்சும் இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தன.

நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவும் கலந்து கொண்டிருந்தார்.

டிஜிட்டல் பொருளாதார மாற்றத்தின் ஊடாக இலங்கையின் பொருளாதாரத்தை, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வளர்ந்து வரும் பொருளாதாரமாக மாற்ற முடியும் என்றும் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

குறிப்பாக புதிய சட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரமாக இலங்கையின் பொருளாதாரத்தை மாற்ற முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார். (ம-7,10)

## மரண அறிவித்தல்

### செபஸ்ரி ஆரோக்கியம்



சின்னமடு 3ம் வட்டாரம் புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் ஊர்காவற்துறை கிழக்கை வசிப்பிடமாகவும் ஊர்காவற்துறை கரம்பொன்னை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரி ஆரோக்கியம் அவர்கள் (25.03.2024) திங்கட்கிழமை அன்று இறைபாதம் அடைந்தார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் (27.03.2024) இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் (ஊர்காவற்துறை) ஆராதனையுடன் நிறைவடைந்து, ஊர்காவற்துறை சேமக்காலையில் பூதவுடல் அடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊர்காவற்துறை.

(262)

தகவல்:
குடும்பத்தினர்

வாடகைக்கு வாகனம்
சேல்ஸ் வாகனம்
வாடகைக்கு விடப்படும்.
Super AC மூடப்பட்ட வாகனம்.
தொடர்புகளுக்கு (263)
075 230 9758

மலிவு விற்பனை
கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை
WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer
ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-0011)
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்




(C-0010)
சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(குறிப்பு : சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)
தொ.பேசி : 021 222 2567
Packed By:
ROYAL INDUSTRIES®
COLOMBO - 12
076 668 8025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலைப் பிற்போட்டால் மக்கள் வீதிக்கிறங்குவர்

## பவ்ரல் அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

**அரசாங்கம் அரசமைப்பை மீறி ஜனாதிபதித் தேர்தலை பிற்போட்டால் மக்கள் வீதிக்கு இறங்கக்கூடும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரலின் நிறைவேற்று பணிப்பாளர் ரோகண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

தேர்தல், அரசியல் கட்சிகளுக்கானதோ அரசாங்கத்திற்கானதோ அல்லது அரசியல் தலைவர்களிற்கானதோ இல்லை. தேர்தல்கள் மக்களிற்கானவை.

ஜனாதிபதித் தேர்தல் நிச்சயமாக செப்டெம்பர் 17 முதல் ஒக்டோபர் 17 ஆம் திகதிக்குள் நடைபெறவேண்டும். ஜனாதிபதியோ அமைச்சரவையோ பசில் ராஜபக்சவோ அதனை மாற்ற முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டியது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பு, கடமை என தெரிவித்துள்ள பவ்ரல் அமைப்பின் ரோகண ஹெட்டியாராச்சி ஜனாதிபதி தேர்தல்கள் தொடர்பில் அரசாங்கம் தீர்மானங்களை எடுக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.

அவர்கள் ஏதாவது காரணத்திற்காக அரசமைப்பை மீறி செயற்பட முடிந்தால் வீதிக்கு இறங்குவதற்கான வலு எங்கள் மக்களுக்குள்ளது.

முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ முதலில் பாராளுமன்ற தேர்தலை நடத்த வேண்டும் என கருத்து வெளியிட்டுள்ள நிலையிலேயே பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி-5-6)



## ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# மைத்திரியின் வாக்குமூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய, வாக்குமூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் சுமார் 6 மணிநேரம் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

இந்த நிலையில், அவரது வாக்குமூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி ஈஸ்டர் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் தொடர்பான உண்மைகள் தமக்குத் தெரியும் என முன்னாள் ஜனாதிபதி கண்டியில் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, குறித்த கருத்து தொடர்பாக விசாரணை நடத்துமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்ததை அடுத்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன நேற்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகி, வாக்குமூலம் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# 17 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு- சுகாதார அமைச்சு

(கொழும்பு)

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் மேலும் 17 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பு.விஜேசூரிய கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படாத பல வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனினும் தட்டுப்பாடு காணப்படும் மருந்துகளுக்கான மாற்று மருந்துகள் காணப்படுகின்றன எனத் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# மேலும் குறைகிறது வங்கி வட்டி வீதங்கள்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி தனது கொள்கை வட்டி வீதத்தை மேலும் குறைக்க தீர்மானித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபை நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதன்படி, துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் (SLFR) 50 அடிப்படை புள்ளிகளால் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன் மதிப்பு முறையே 8.50 சதவீதம் மற்றும் 9.50 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளன. (நி-5-6)

# இலங்கைக்கு கடத்தப்பட்ட 88 அரிய உயிரினங்கள்


## கட்டுநாயக்கவில் அதிரடியாக கைது செய்யப்பட்ட தம்பதியினர்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் தாய்லாந்தில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 400,000 ரூபா பெறுமதியான 88 விலங்குகளுடன் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து நேற்று முன்தினம் குறித்த தம்பதியினர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவர்கள் அவிசாவளை, புவக்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 35 வயதுடைய இளம் தம்பதியர் ஆவார்.



சம்பவம் தொடர்பில் தெரிய வருகையில், இருவரும் தாய்லாந்தின் பாங்கொக்கில் இருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL-405 இல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். இதன்போது குறித்த தம்பதியரின் காற்று நுழையும் வகையிலான பெட்டிகளில் தவளை, மீன், குளவி, அணில், ஆமை, பல்லி, எலி, மற்றும் பிற வகை புழுக்கள் ஆகிய உயிரினங்களை அடைத்து இலங்கைக்கு கொண்டு வந்துள்ளனர்.

விசாரணைகள் நிறைவடையும் வரை கண்டுபிடிக்கப்பட்ட விலங்குகளை கட்டுநாயக்க விமான நிலைய விலங்குகள் தனிமைப்படுத்தல் பிரிவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# இளநீர் ஏற்றுமதி மூலம் 3,439 மில்லியன் ரூபாய் வருமானம்

## தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவிப்பு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் தேங்காய் நீர் ஏற்றுமதி மூலம் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் சுமார் 3,439 மில்லியன் ரூபாய் என தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வருமானமானது கடந்த வருடத்தின் பெப்ரவரி மாதத்தை விடவும் 734 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளதாக தெங்கு ஏற்றுமதி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் பெப்ரவரி மாதத்தில் தேங்காய் நீர் ஏற்றுமதியின் மூலம் 2, 705 ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இணையத்தில் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் மின்னஞ்சல் மூலம் முறைப்பாடு செய்யலாம்

## பொலிஸார் அறிவிப்பு

(கொழும்பு)

இணையத்தில் விடுக்கப்படும் பல்வேறு அச்சுறுத்தல்கள் தொடர்பில் கணனி குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்யலாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடக [illegible] பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

இணையத்தில் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் வீட்டிலிருந்து மின்னஞ்சல் ஊடாக கணனி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு முறைப்பாடு செய்ய முடியும்.

எனவே dir.ccid@police.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரி அல்லது, 109 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு பிரச்சினைகளை அறிவிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான துஷ்பிரயோகம் தடுப்பு பணியகம் 24 மணி நேரமும் செயற்படும் எனவும், பாதிக்கப்படும் நபர்கள் எந்நேரமும் தொடர்புகொண்டு உதவிகோர முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரன் 'அசுரன்' துபே

## குஜராத்தை இலகுவாக வீழ்த்தியது சென்னை



ஐ.பி.எல்., லீக் போட்டியில் சென்னை அணி 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத்தை வீழ்த்தியது. சிக்சர் மழை பொழிந்த ஷிவம் துபே ரன் அசுரனாக செயற்பட்டு அரைச்சதம் விளாசினார்.

இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 17வது சீசன் நடக்கிறது. மொத்தம் 10 அணிகள் மோதுகின்றன.

சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த லீக் போட்டியில் நடப்பு சம்பியன் சென்னை அணி, குஜராத்தை எதிர்கொண்டது. நாணயச்சுழற்சியில் வென்ற குஜராத் அணியின் தலைவர் சுப்மன் கில், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

சென்னை அணியில் "சுழல்" தீக்சனா நீக்கப்பட்டு வேகப்பந்து வீச்சாளர் பதிரான சேர்க்கப்பட்டார். குஜராத் அணியில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

முதலில் களமிறங்கிய குஜராத் "லெவன்" அணியில் சாய் கிஷோர், விஜய் சங்கர் என இரு தமிழக வீரர்கள் இடம்பெற்றனர்.

சென்னை அணிக்கு அணித் தலைவர் ருதுராஜ், ரச்சின் ரவிந்திரா ஜோடி ஆரம்பம் வழங்கியது.

முதல் ஓவரை ஓமர் சாய் வீசினார். இதன் கடைசிப் பந்தில் ருதுராஜ் கொடுத்த எளிய பிடியை, சாய் கிஷோர் நழுவவிட்டார். உமேஷ் யாதவ் வீசிய இரண்டாவது ஓவரில் ஒரு சிக்சர், பவுண்டரி விளாசி அதிரடியை ஆரமபித்தார் ரச்சின்.

தொடர்ந்து ஓமர்சாய் ஓவரிலும் அடுத்தடுத்து இரு பவுண்டரி அடித்தார் ரச்சின். போட்டியின் ஐந்தாவது ஓவரை வீசினார் ஓமர் சாய்.

இதன் முதல் பந்தை ருதுராஜ், பவுண்டரிக்கு அனுப்பினார். மறுபக்கம் புயல் வேகத்தில் ஓட்டம் சேர்த்த ரச்சின், 3, 5ஆவது பந்தில் ஒரு சிக்சர், பவுண்டரி என அடிக்க, அந்த ஓவரில் 17 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. சென்னை 5 ஓவரில் 58/0 ஓட்டங்கள் எடுத்தது.

இந்த ஜோடியை பிரிக்க அனுபவ சுழற்பந்து வீச்சாளர் ரஷித் கானை அழைத்தார் சுப்மன். இதற்கு உடனடி பலன் கிடைத்தது. ரஷித் கான் வீசிய முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டினார் ரச்சின். இரண்டாவது பந்தை ரச்சின் (46 ஓட்., 20 பந்து) கோட்டை விட, விக்கெட் கீப்பர் சகா "ஸ்டம்பிங்" செய்ய, சோகத்துடன் திரும்பினார்.

மனம் தளராத ருதுராஜ், இதே ஓவரின் கடைசி பந்தை பவுண்டரிக்கு அனுப்பி வைத்தார். ஸ்பென்சர் ஜான்சன் வீசிய போட்டியின் 10 வது ஓவரின் முதல் பந்தில் சிக்சர், கடைசி பந்தில் பவுண்டரி அடித்து ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார் ருதுராஜ். சென்னை அணி 10 ஓவர்களில் 104/1 ஓட்டம் எடுத்தது.

சற்று தடுமாறிய ரகானே (12), சாய் கிஷோர் சுழலில் சிக்கினார். பின் வந்த ஷிவம் துபே, சாய் கிஷோர் ஓவரில் அடுத்தடுத்து இரண்டு சிக்சர் விளாசினார். இந்நிலையில் ருதுராஜ் (46), ஜோன்சன் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து மிட்செல், ஷிவம் துபே ஜோடி சேர்ந்தனர். ரஷித் கானின் பந்துகளை மிட்செல் பவுண்டரி அடிக்க, துபே சிக்சருக்கு விரட்டினார்.

மோகித் சர்மா பந்தில் சிக்சர் அடித்த துபே (51 ஓட்., 5 சிக்சர்), 22 வது பந்தில் அரைச்சதம் கடந்தார். ஐ.பி.எல்., தொடரில் 7ஆவது அரைசதம் அடித்த இவர், ரஷித் பந்தில் ஆட்டமிழந்தார். வந்த வேகத்தில் ரஷித் ஓவரில் 2 சிக்சர் அடித்த சமீர் ரிஸ்வி (14) மோகித் பந்தில் வீழ்ந்தார். மிட்செல் (24) ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

சென்னை அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 206 ஓட்டங்கள் குவித்தது. ஜடேஜா (7) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

குஜராத் அணிக்கு சகா (8), சுப்மன் ஜோடி சுமார் ஆரம்பம் வழங்கியது. சகார் "வேகத்தில்" சகா (21) வெளியேறினார். மிட்செல் பந்தில் விஜய் சங்கர் (12) தோனியின் துடிப்பான "பிடியெடுப்பில்" திரும்பினார். அடுத்து மில்லர் (21) ரகானேயிடம் "பிடி" கொடுத்தார். "இம்பேக்ட்" வீரராக களமிறங்கி போராடிய சாய் சுதர்சன் 37 ஓட்., மட்டும் எடுத்து ஆட்டமிழந்தார். ஓமர்சாய் (11), டிவாட்யா (6) கைவிட, குஜராத் அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 143 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

சென்னை சார்பில் சகார் 2, முஸ்தபிஷுர் 2, தேஷ்பாண்டே 2 விக்கெட் சாய்த்தனர்.




## போட்டித்துளிகள்...

**தோனி "கேட்ச்"**

மிட்செல் வீசிய பந்தை (7.3 வது ஓவர்) அடித்தார் விஜய் சங்கர். இதை அப்படியே வலது புறமாக அந்தரத்தில் பாய்ந்து "கேட்ச்" செய்து அசத்தினார் விக்கெட் கீப்பர் தோனி .

அடுத்து தேஷ்பாண்டே பந்தை (11.5வது) விளாசினார் மில்லர். "மிட் விக்கெட்" பகுதியில் தாழ்வாக சென்ற பந்தை, ரகானே 35, அப்படியே முன்னோக்கி "டைவ்" அடித்து "கேட்ச்" செய்தார். இரு "சீனியர்" வீரர்களும் பீல்டிங்கில் துடிப்பாக செயல்பட்டது ரசிகர்களை கவர்ந்தது.

**மூன்றாவது முறை**

நேற்று ருதுராஜ், ரச்சின் ஜோடி முதல் விக்கெட்டுக்கு 62 ரன் சேர்த்தது. இதையடுத்து குஜராத் அணிக்கு எதிராக சென்னை ஆரம்ப ஜோடி தொடர்ந்து மூன்றாவது முறையாக 50 ரன்னுக்கும் மேல் சேர்த்தது. முன்னதாக 2023 சீசனில் ருதுராஜ், ரச்சின் ஜோடி 87, 74 ரன் எடுத்திருந்தது.(ம-7,10)




## யாஷ் தயாளை குப்பையுடன் ஒப்பிட்ட முரளி கார்த்திக்

ஐபிஎல் 2024 டி20 கிரிக்கெட் தொடரில் 6-வது லீக் போட்டியில் பஞ்சாப் பெங்களூரு அணிகள் மோதின. இந்த போட்டியில் முதலாவதாக பேட்டிங் செய்த பஞ்சாப் 6 விக்கெட்டுகளை இழந்து 176 ரன்கள் எடுத்தது. அதைத் தொடர்ந்து ஆடிய பெங்களூரு அணி 19.2 ஓவரில் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் பெங்களூரு அணிக்காக விளையாடிய யாஷ் தயாள் 4 ஓவரில் 23 ரன்கள் மட்டும் கொடுத்து ஒரு விக்கெட் வீழ்த்தியிருந்தார்.

இந்நிலையில் யாரோ ஒருவரின் குப்பை யாரோ ஒருவருக்கு புதையலாகிறது என இந்திய அணியின் முன்னாள் வீரரும் தமிழக வீரருமான முரளி கார்த்திக் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. கடந்த வருடம் குஜராத்துக்காக விளையாடிய யாஷ் தயாள் கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் ரிங்கு சிங்கிடம் கடைசி ஓவரில் 5 சிக்சர்களை கொடுத்து தோல்விக்கு காரணமாக அமைந்தார். அதன் காரணமாக அடுத்த போட்டியிலேயே நீக்கப்பட்டு குஜராத் அணியிலிருந்து கழற்றி விடப்பட்ட அவரை தற்போது பெங்களூரு வாங்கியுள்ளது



இது குறித்து அவர் கூறியதாவது,

குஜராத் அணியில் குப்பையை போல் செயல்பட்ட யாஷ் தயாள் பெங்களூரு அணியில் புதையலை போல் செயல்படுவதாக வர்ணித்த முரளி கார்த்திகை தற்போது ரசிகர்கள் சமூக வலைதளங்களில் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர்ச்செய்கைக்கான தானியங்கள் வவு. விவசாயிகளுக்கு வழங்கி வைப்பு



(குருமன்காடு)

நீர்பாசன அமைச்சின் கீழ் குளங்கள், கிராமங்களின் மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமிய மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக பயிர்ச்செய்கைக்கான தானியங்கள் வழங்கும் வேலைத்திட்டம் நாடு பூராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு தானியங்கள் வழங்கும் நிகழ்வு இலுப்பையடிப் பகுதியில் அமைந்துள்ள கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தில் நேற்று இடம் பெற்றது.

இத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட குளங்களின் கீழான பயிற்செய்கைக்காக கச்சான், கௌபி, பயறு, உழுந்து என்பன வழங்கப்படவுள்ளன.

அதில் முதல் கட்டமாக கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சமனங்குளம் பகுதியைச் சேர்ந்த 9 விவசாயிகளுக்கு கௌபி பயிர்ச்செய்கைக்காக விதைக் கௌபி வழங்கி வைக்கப்பட்டதுடன் பயிற்செய்கை தொடர்பான ஆலோசனை வழிகாட்டல்களும் வழங்கப்பட்டது.

நிகழ்வில் கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையப் பொறுப்பதிகாரி திருமதி காஞ்சனா, கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(நி-5-6-250)

---

இராஜகுலேந்திரன் நிறுவனம் நடத்திய மேனாட்டு இசைக்கான பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை யாழ்.வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். இந்துக் கல்லூரி மாணவன் கேசவநாதன் திருவரங்கன் பரிசில் பெறுவதைப் படத்தில் காணலாம்.



இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பெண்கள் கல்வி மற்றும் அபிவிருத்தி என்பவற்றின் இயக்குநர் திருமதி.ஷிராணி மில்ஸ் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

வணிகமாணி சிறப்பு பட்டப்படிப்பு-2021/2022

Bachelor Of Commerce Honours Degree Programme-2021/2022

**புதிய அனுமதிக்கான விண்ணப்பம் - 2024 -அணி - VIII**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த நான்கு வருட கால வணிகமாணி சிறப்புக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

- க.பொ.த. (உ/த) பரீட்சை (வணிகப்பிரிவு) - 2022 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியானவர்கள்.

**அல்லது**

- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான தகைமையைக் கொண்டவர்கள்

**வணிகமாணியில் பாட அலகுகளிற்கான விலக்களிப்புக் கோருதல்:**

வணிகமாணி கற்கை நெறியில் காணப்படும் பாட அலகுகள் அல்லது அதற்குச் சமனான பாட அலகுகளை உள்ளடக்கிய கற்கை நெறிகளில் சித்தியடைந்தோர், உரிய தகைமைகளைக் குறிப்பிட்டு விலக்களிப்புக்கு விண்ணப்பிக்க முடியும். அவர்கள் தகைமை பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் பாட அலகுகளிற்கான விலக்களிப்பு அனுமதிக்கப்படும்.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் (Z-Core) அல்லது பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது மூன்றின் மூலமும் தெரிவு செய்யப்படுவார்கள். பொது உளச்சார்புப் பரீட்சைக்கான தேவை ஏற்படின் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பக் கட்டணமாக ரூபா 1000.00 இனை 89008208000061 என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் செலுத்தி www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்றி https://www.codl.jfn.ac.lk/index.php/bcom-batch-viii/ எனும் இணைப்பின் ஊடாக விண்ணப்பித்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

விண்ணப்ப முடிவுத்திகதி: 10.05.2024 (வெள்ளிக்கிழமை) (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

மேலதிக விபரங்களை 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணூடாக அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுகொள்ளலாம்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி.**

(c--0008)

---

# இராசிபலன்

27.03.2024
பங்குனி 17, புதன்கிழமை
துதியை பிற்பகல் 4.25மணிவரை

சித்திரை பிற்பகல் 3.35 மணிவரை
சுபநேரம்-4.44- 6.14மணிவரை
இராகுகாலம்-12.14-1.44 மணிவரை
சுப முகூர்த்த தினம்

சந்திராஷ்டமம்
சதயம்,பூரட்டாதி

வளவன்




நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவார்கள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், உடல் நலன் சீராகும், காரிய அனுகூலமுண்டு.




கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.




பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.




சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவம் அந்தஸ்து உயரும்.




சுப முயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, சுபவிரயங்கள் அதிகரிக்கும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் அதிகரிக்கும், உடல் நலனில் கவனம் தேவை.




எடுத்த காரியங்களை நிறைவு செய்ய அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.




இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்திகரமாக அமையும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், எண்ணிய காரியம் எளிதில் கைகூடும்.




நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்டுவீர்கள்.




தொழில் ரீதியான பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம்.

எந்த தவறும் செய[illegible] எதுவும் செய்திருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கீரிமலை காணி சுவீகரிப்பு

## மக்கள் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

**யாழ். கீரிமலையில் ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதியில் காணி அளவீட்டுப்பணி மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.**





யாழ்.கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதியை நகர அபிவிருத்தி நடவடிக்கைக்காக காணி சுவீகரிக்கும் அடிப்படையில் அளவீடுகள் செய்வதற்கு நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் நேற்று காலை 10 மணியளவில் வருகை தந்திருந்தனர்.

இதன்போது குறித்த காணி அளவீட்டுக்கு காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிட்டதுடன் நில அளவைத்திணைக்களத்தின் வாகனத்தினையும் இடைமறித்தனர்.

காணி உரிமையாளர்களின் எதிர்ப்பினை அடுத்து காணியினை அளவீடு செய்வதற்கு தமக்கு விருப்பம் இல்லை என காணி உரிமையாளர்கள் கடிதம் எழுதி கையொப்பமிட்டு வழங்கியதை அடுத்து நில அளவைத்திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

குறித்த பகுதியில் அதிகமான பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவின்கீழ் உள்ள நகுலேஸ்வரம் (ஜே/226), காங்கேசன்துறை (ஜே/233) கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள ஆழ் வான்மலையடி, வேலர்காடு, புண்ணன் புதுக்காடு, பத்திராயான், புதுக்காடு, சோலை சேனாதிராயன் என அழைக்கப்படும் பகுதிகளில் 12.0399 கெக்டேயர் நிலம் அளவீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுமை குறிப்பிடத்தக்கது.

(நி-5-6-33)



யாழ்.இந்துக் கல்லூரியின் மாணவ முதல்வர் சபையினால் முன்னெடுக்கப்பட்ட நன்கொடை வாரத் தில் பாடசாலை மாணவர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற சீருடைகள், சப்பாத்துக்கள் சீர்செய்யப்பட்டு மற்றும் தரம் 11 மாணவர்களுக்கான கடந்த கால பரீட்சை வினாக்களை கொண்ட புத்தகத்தின் ஒரு தொகுதியும் வேலணை மத்திய கல்லூரிக்கும் வேலணை நடராஜா வித்தியாலயத்திற்கும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (படம்:சிவசாந்தன்)

# வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற விற்பனைக் கண்காட்சி





(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் வடமாகாண தொழிற்துறைத் திணைக்களத்தின் அனுசரணையில் நேற்றுமுன்தினம் விற்பனைக் கண்காட்சி வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் வசிக்கும் சிறுதொழில் முயற்சியாளர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தி அதிகளவான விற்பனையில் ஈடுபட்டனர்.

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதோடு அவர்களது உள்ளூர் உற்பத்திகளின் தரத்தை மக்கள் மத்தியில் இலகுவாகக் கொண்டு சென்று உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் ஒவ்வொரு மாதமும் குறித்த விற்பனைக் கண்காட்சி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-60)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று உலக நாடக விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் அனைத்துலக நாடக விழா இன்று புதன்கிழமை காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்லைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். நாடக தினவிழாவில் பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்களின் நாடகங்கள் மற்றும் தொழில்வாண்மை நாடகக் கலைஞர்களின் நாடகங்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# சீமெந்து தொழிற்சாலையில் இரும்பு திருடிய இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்குள் அத்துமீறி நுழைந்து இரும்புத் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதுடன் திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனமும் ஒரு தொகை இரும்புக் கம்பிகளும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்குள் வாகனம் ஒன்றில் அத்துமீறி நுழைந்து இருவர் இரும்பு திருட்டில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் , அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் திருட்டில் ஈடுபட்ட இருவரையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களையும் , அவர்களது வாகனத்தையும், திருடப்பட்ட ஒரு தொகை இரும்புக் கம்பிகளையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (நி-5-6-33)

# மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என யாழ்.மாவட்ட பதில் அரச அதிபர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 130 | 130-180 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 220 | 180-230 | 300 |
| தக்காளி | 80 | 120 | 130 | 80-100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 100 | 100-130 | 160 |
| கோவா | 250 | 230 | 280 | 350 | 350 |
| கரட் | 300 | 400 | 350 | 300 | 400 |
| பூசணி | 200 | 140 | 330 | 100-120 | 160 |
| புடோல் | 150 | 150 | 120 | 120 | 120 |
| வாழைக்காய் | 130 | 200 | 120 | 100-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 250 | 200-300 | 250 |
| பெரிய வெங்காயம் | 550 | 550 | 460 | 520 | 600 |
| பாகற்காய் | 300 | 300 | 200 | 350 | 250 |
| வெண்டக்காய் | 250 | 200 | 100 | 100-170 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 200 | 250 | 250 | 250-350 | 300 |
| லீக்ஸ் | 300 | 300 | 250 | 300 | 300 |
| பீற்றூட் | 250 | 200 | 250 | 200 | 300 |
| கறிமிளகாய் | 300 | 200 | 200 | 350 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 600 | 300-700 | 1000 |
| போஞ்சி | 350 | 250 | 200 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 80 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 40 | 60 | 300 |
| தேசிக்காய் | 200 | 200 | 150 | 150-200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 110 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 400 | 300 | -- | 400 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 140 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 200 | 50 | 100 | 80 |
| [illegible] | 160 | -- | 120 | 80 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைவடையும் மதுபான விலை

(கொழும்பு)

எதிர்வரும் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் மதுபானத்தின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

பதுளை பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், "பொருட்களின் விலை குறைவடைய வேண்டும், எல்லாவற்றினதும் விலைகள் குறைக்க வேண்டும் முக்கியமாக மதுபானத்தின் விலையை ஆண்டு இறுதிக்குள் குறைக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கின்றோம்.

நாங்கள் இவ்வளவு காலமாக பிரபலமான தீர்மானங்கள் எடுக்கவில்லை இனி எடுக்கப்போவதும் இல்லை அவ்வாறான தீர்மானங்கள் எடுக்கச் சென்றதால் தான் டொலர் 200 ரூபாவிற்கு வீழ்ச்சியடைந்தது" என அவர் தெரிவித்துள்ளார்.

(நி-5-6)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

# வெளிப்படையான விசாரணை அவசியம் தேவை - சஜித்

(கொழும்பு)

"ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னணி தொடர்பாக புதிய கதைகளை வெளியிடாமல் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய விசாரணை நடத்தப்பட வேண்டும்" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

அம்பலாந்தோட்டையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது "விசாரணைகளுக்காக பொதுவான ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு பதிலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களை ஈடுபடுத்துவது சிறந்தது.

வெளிப்படையான மற்றும் நேர்மையான விசாரணையை முன்னெடுப்பது காலத்தின் கட்டாயம்.

தற்போதைய ஜனாதிபதி ஸ்கொட்லாந்து யார்ட் பொலிஸாரை அழைத்து விசாரணைகளை நடத்துவதாக கூறியிருந்த போதிலும் இதுவரையில் அதற்கான எந்தவித முயற்சியும் எடுக்கப்படவில்லை.

எனவே, இந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர்களை தேடுவதில் அவருக்கு நாட்டமில்லை என தோன்றுகிறது.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மூடி மறைக்கின்றமை மற்றும் ஈடுபாடு காட்டாமை என்பன பல கேள்விகளையும், சிக்கலையும் இன்று நாட்டில் தோற்றுவித்துள்ளது" என எதிர் கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)


**லங்கா மஹால் (PVT) LTD**

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (252)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

**00919566156719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

**077 839 3974**

**மலிவு விலையில்**

பாவித்த முதிரை 5' மேசை, 4' மேசை, 4' அலுமாரி என்பனவும் 2 வெளி யன்னல், கொமட் வீல் செயர், புதிய Tea & coffee மெசின்(RA)

1 மாத ஊர் கோழிக்குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. (257)

**077 873 0129**

**பெயர் மாற்ற அறிவித்தல்**

23/1, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறீதரசர்மா கவிஷ்ணா ஆகிய நான் 27.03.2024 இன்று முதல் எனது பெயரை ஶ்ரீகவிஷ்ணசர்மா எனப் பெயர் மாற்றம் செய்கின்றேன். இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

(260)

உண்மையுள்ள

திரு.சிறீதரசர்மா ஶ்ரீகவிஷ்ணசர்மா.

**யா/மல்லாகம் மகாவித்தியாலயம்**

யா/மல்லாகம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்.

**காலம்: 31.03.2024(ஞாயிற்றுக்கிழமை)**

**இடம்: பாடசாலை மண்டபம்**

**நேரம்: பி.ப 3.00மணி**

அனைத்து பழைய மாணவர்களும் கலந்து கொள்ளவும்.

அதிபர். (சி-0009)

**பணியாளர்கள் தேவை**

சுன்னாகத்தில் புதிதாக திறக்கப்படவுள்ள Hotel ஒன்றிற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் தேவை.

- முகாமையாளர் (குறைந்தது 3 வருட அனுபவம் )
- சமையற்காரர் (குறைந்தது 3 வருடஅனுபவம்)
- துப்பரவு செய்பவர்
- உணவு பரிமாறுபவர்

தொடர்புகளுக்கு:

**077 558 8835, 077 984 5966** (258)

**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1985 - இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 69 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Bsc, Msc, CivilEngineer
எதிர்பார்ப்பு: படித்த குணமான பெண்
தொ.இ: B/14342

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 21
உயரம்: 6'
தகைமை/தொழில்- O/L, மலேசியா
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/14364

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
உயரம் :5' 6"
தகைமை/தொழில்: S.LA.S,(A.G.A)
எதிர்பார்ப்பு- தகுதியான பெண்
தொ.இ: B/14018

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 12 1/2
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:- BBA பட்டதாரி, DO
எதிர்பார்ப்பு: அரச தொழில் (பட்டதாரி)
தொ.இ: B/12753

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1993 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா- 23
உயரம் : 5' 2"
தகைமை/தொழில்: GAQ, பட்டதாரி
எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்
தொ.இ: G/14263

பிறப்பு-1987 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 10
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு.வியாபாரம், உத்தியோகம்,
தொ.இ: G/14264

பிறப்பு -1992 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 9 1/2
உயரம்:5'3"
தகைமை/தொழில்: Bsc, Master in Information Technology, Software Engineer
எதிர்பார்ப்பு: படித்த குணமுள்ள மணமகன் (அவுஸ்திரேலியா)
தொ.இ: G/14265

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 47
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்: பட்டதாரி
எதிர்பார்ப்பு: படித்த குணமுள்ள மணமகன், வெளிநாட்டு மணமகன்
தொ.இ: G/14266

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வடகொரிய ஜனாதிபதியை சந்திக்க விருப்பம் தெரிவித்த ஜப்பான் பிரதமர்





(டோக்கியோ)

கொரிய தீபகற்ப பதற்றத்துக்கு மத்தியில் ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னை சந்திக்க தனது விருப்பத்தை தெரிவித்துள்ளார்.

தென்கொரியா மற்றும் அமெரிக்கா தங்களுக்கு அச்சு றுத்தலாக இருக்கும் என கருதும் வடகொரியா, இரு நாடுகளுக்கும் எதிராக அடிக்கடி ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது.

கொரிய தீபகற்பத்திற்கும் ஜப்பான் கடல் பகுதிக்கும் இடையில் இந்த சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

இதனால் வடகொரியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் மோதல் இருந்து வருகிறது.

இதனால் தங்களது பாதுகாப்பு கருதி ஜப்பானும் தென் கொரியாவும் அமெரிக்காவுடன் இணைந்து கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபடுகின்றன.

இதனை தங்களுக்கு எதிரான போர் ஒத்திகை என கருதும் வடகொரியா இந்த பயிற்சியை நிறுத்தும்படி எச் சரிக்கை விடுத்துள்ளது.

எனினும் அந்த நாடுகள் அவ்வப்போது கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபடுகின்றன. இந்த பதற்றத்துக்கு மத்தியில் ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னை சந்திக்க தனது விருப்பத்தை தெரிவித்துள்ளார்.

அதன்படி அவர்கள் இருவரும் கூடிய விரைவில் சந்திக்க உள்ளதாக வட கொரியா தலைவரின் சகோதரி கிம் யோ ஜாங் தெரிவித்துள்ளார்.

அப்போது ஜப்பானில் இருந்து சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் வடகொரியாவுக்கு நாடு கடத்தப்பட்டவர்களை விடுவிப்பது, இருதரப்பு உறவு களை மேம்படுத்துவது ஆகியவை குறித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக அங்குள்ள ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி-5-6)

## ரஃபா மீதான தாக்குதலை இஸ்ரேல் கைவிட வேண்டும்

### அமெரிக்க துணை ஜனாதிபதி



(வோஷிங்டன்)

பாலஸ்தீனிய நகரமான ரஃபா மீது தாக்குதல் நடத்தும் திட்டத்தை கைவிட வேண்டும் என இஸ்ரேல் பிரதமருக்கு அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து சமீபத்தில் ஊடகம் ஒன்றிற்கு துணை ஜனாதிபதி அளித்த பேட்டியில் கூறியதாவது,

ரஃபா நகருக்குள் முன்னேறி தாக்குதலை தொடங்கினால், இஸ்ரேலுக்கு கடுமையான விளைவுகள் ஏற்படும். இதை நான் மறுக்கவில்லை. தாக்குதல் நடத்தப்படவேண்டுமா, இல்லையா? என்பதிலும் எங்கள் கண்ணோட்டம் தெளிவாக உள்ளது.

ரஃபா நகரில் எந்த ஒரு பெரிய இராணுவ நடவடிக்கை மேற்கொண்டாலும் அது மிகப் பெரிய தவறு எனத் தெரிவித்தார்.

அத்துடன்ரஃபாவில் உள்ள சுமார் ஒன்றரை மில்லியன் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் நாம் கண்ணும் கருத்துமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் அமைப்பை முற்றாக ஒழிக்கும் வகையில் காசாவில் தீவிர தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல், இதன் அடுத்த கட்டமாக ரஃபா நகரில் தாக்குதல் மேற் கொள்ளவுள்ளதாகத் தகவல் வெளியாகியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## காசாவில்

## ஐ.நா. பாது

(நியூயோர்க்)

"காசாவில் மனிதநேய
டியாக போர் நிறுத்தம் செ
என ஐ.நா. பாதுகாப்பு
மொன்று கொண்டு வரப்

ரமழான் பண்டிகையை கருத்தில் கொண்டு காசா பகுதியில் மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானமொன்று கொண்டுவரப்பட்டுள்ளது.

ஜோர்தான் நாட்டினால் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்திற்கு 14 உறுப்பு நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ள நிலையில், அமெரிக்கா இந்த வாக்கெடுப்பை புறக்கணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல்- காசா போர் நிறுத்தம் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் 4 தடவைகள் போர் நிறுத்தத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டிருந்தன.

எனினும், இவையனைத்தும் தோல்வியடைந்த நிலையில், முதன் முறையாகவே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## 'சிவசக்தி'யை அங்கீகரி
## சர்வதேச வானியல் ஒன்



(டில்லி)

சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் தரை இறங்கிய நிலவின் பகுதிக்கு பிரதமர் மோடி சூட்டிய "சிவசக்தி" என்ற பெயரை சர்வதேச வானியல் ஒன்றியம் அங்கீகரித்துள்ளது.

சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் கடந்த ஓகஸ்ட் மாதம் நிலவின் தென்பகுதியில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

நிலவில் விக்ரம் லேண்

யில், கோ
சூட்டும் சர்
ஒன்றியத்
பிரதமர்
"சிவசக்தி"
தற்போது அ
குறிப்பிடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ல் உடனடிப் போர்நிறுத்தம்
# துகாப்பு சபையில் தீர்மானம்

**நேய அடிப்படையில் உடன தம் செய்யப்பட வேண்டும்" காப்புச்சபையில் தீர்மான வரப்பட்டுள்ளது.**

மெ
பை
தரி

றுத்
ாது
கள்
கள்

னத்
லை
வே
வற்

இந்த நிலையில், காசாவில் மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ள இஸ்ரேல் அனுமதிக்க வேண்டும் என ஐ.நா. பொதுச் செயலாளர் அன்ரானியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர், ரஃபா நகரில் தரைவழித் தாக்குதலை மேற்கொள்ள இஸ்ரேல் தயாராகி வருவதாகவும் காசாவின் மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் அங்கு தஞ்சம் அடைந்துள்ளமையால் இஸ்ரேல் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், காசாவுக்குள் மனிதாபிமான உதவிகளைக் கொண்டுசெல்வதில் பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர் காசா எல்லையின் ஒருபுறம், எகிப்தின் வடக்கு சினாய் மாகாணத்தில் சுமார் 7,000 நிவாரண லொறிகள் நீண்ட வரிசையில் காத்திருப்பதாகவும் காசாவுக்கு மனிதாபிமான உதவிகளைக் கொண்டுசெல்வதற்கு இஸ்ரேல் கட்டுப்பாடற்ற அனுமதி வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.



அத்தோடு, அனைத்து பணயக் கைதிகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் மனிதாபிமான போர் நிறுத்தம் மற்றும் பணயக் கைதிகள் விடுதலை என்பன ஒரே நேரத்தில் நடைபெற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்தும் தாக்குதலில் இதுவரை 32,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(நி-5-6)

## ீகரித்தது ஒன்றியம்



டர் தடம் பதித்த பகுதிக்கு சிவசக்தி என பெயர் சூட்டி, விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக தரையிறங்கிய நாளான ஓகஸ்ட் 23 ஆம் திகதி தேசிய விண்வெளி தினமாக கொண்டாடப்படும் எனவும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

இந்த நிலையில், கோள்களுக்கு பெயர் சூட்டும் சர்வதேச வானியல் ஒன்றியத்தின் செயற்குழு, பிரதமர் மோடிசூட்டிய "சிவசக்தி" என்ற பெயரை தற்போது அங்கீகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(நி-5-6)

## சீனாவின் ஒருங்கிணைந்த பகுதியே அருணாச்சல பிரதேசம்
## மீண்டும் இந்தியாவை சீண்டும் சீனா

(பீஜிங்)

அருணாச்சல பிரதேசம் என்றழைக்கப்படும் 'ஷாங்னான்' சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என்று சீன வெளியுறவு அமைச்சு மீண்டும் தெரிவித்துள்ளது.

அருணாசல பிரதேசத்தை சீனா தொடர்ந்து உரிமை கொண்டாடி வருவது அபத்தமானது என்று வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் குறிப்பிட்டிருந்த நிலையில் இந்தக் கருத்தை சீனா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் லின் ஜியான் கூறியதாவது.




இந்தியா, சீனா இடையேயான எல்லைப் பகுதி இதுவரை வரையறுக்கப்பட வில்லை. அருணாசல பிரதேசத்துக்கு 'ஷாங்னான்' என்பதுதான் சீனாவின் அதிகாரபூர்வ பெயர்.

இந்தப் பகுதி இந்தியாவால் சட்டவிரோதமாக ஆக்கிர மிக்கப்படுவதற்கு முன்பு வரை, சீனாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது.

எனவே, இந்தப் பிராந்தியத்தை திறம்பட நிர்வகிக்கும் உரிமை சீனாவுக்கு எப்போதும் உள்ளது. சட்டவிரோதமாக ஆக்கிரமித்த இந்தப் பிராந்தியத்தை அருணாச்சல பிரதேசமாக கடந்த 1987 இல் தான் இந்தியா நிறுவியது என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு எதிராக சீனா தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகிறது. சீனாவின் இந்த நிலைப்பாட்டில் எப்போதும் மாற்றமிருக்காது என தெரிவித்தார்.

(நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ச் 21 உலக காடுகள் தினம்: அழித்தால் அழிந்துவிடும் மனித இனம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வளிமண்டல வெப்பநிலை நாளுக்கு நாள் எகிறிக் கொண்டிருக்கின்றது. வெளியில் மட்டுமல்ல வீட்டினுள்ளும் காற்றோட்டமில்லாது உள் வெப்ப நிலையும் உயர்ந்திருக்கின்றது. இந்த வெப்பத்தையே தாக்குப்பிடிக்க முடியவில்லை. வெப்பநிலை உயர்வடைவதனால் மனிதருக்கு பலவிதமான நோய்கள் ஏற்படுவதற்கு சாத்தியக்கூறு அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனையும் தாண்டி பயிர்களில் பூச்சி பீடைகளின் தாக்கமும் எதர்பாராதளவிற்கு அதிகரித்திருக்கின்றது. குறிப்பாக தென்னையில் ஆரம்பித்த வெண்ணீ பல தாவரங்களுக்கு பரவி அதனது வீரியத்தை சமாளிக்க முடியாது திண்டாட வைத்துள்ளது.


வெப்பநிலை அதிகரிப்பதனை சமாளிக்கும் நிலைப்பாட்டில் வேளாண் காடுகளையும் ஏனைய காடுகளினதும் மீள் உருவாக்கம் முன்னுரிமையளிக்கப்பட்டதாக அறியப்பட்டுள்ளது. இம்முறை முறை தவறிய வெப்பநிலை மழையைக் காணாததால் இன்னும் சுவாசம் சம்பந்தமான பாதிப்புக்கள் மனிதனுக்கு அதிகரிக்கும் என மருத்துவர்கள் எச்சரித்திருக்கின்றார்கள். காடுகளை வளர்ப்பதற்காக முன்னோடி முயற்சியாக நீரேந்து பரப்புகளில் கண்டல் தாவரங்களை அடுக்கி வளர்ப்பதற்கும் முயற்சி செய்திருக்கின்றார்கள்.

இவ் வருடத்துக்கான கருப்பொருளாக "காடுகளும் கண்டுபிடிப்புக்களும் சிறப்பான உலகுக்கான புதிய தீர்வுகள்" என வரையறுத்திருக்கின்றார்கள். கண்டுபிடிப்புக்களும் தொழினுட்பமும் சேர்ந்து காடுகளின் மீளுருவாக்கம் மற்றும் அதனது அதியுச்ச பயன்பாடு என்பனவற்றை கண்காணிப்பதற்கும் மேலும் காடுகளினை கண்காணிப்பதன் மூலம் ஒவ்வொரு நாடும் தமது பங்களிப்பினை மேலும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்களையும் திட்டமிடலில் உள்ளடக்கியிருக்கின்றன. ஐக்கிய நாடுகள் வலையமைப்பினுாடான காலநிலை மாற்றத்தின் கட்டமைப்பினால் துல்லியமாகக் கணிக்கப்பட்டதன்படி வெளிப்படையான சரியான தகவல்களுடாகவும் காடுகளை கண்டுபிடிப்பினாலான கண்காணிப்பின் மூலமாகவும் உலகில் 13.7 மில்லியன் தொன்கள் காபனீரொட்சைட்டு வெளியேற்றம் குறைக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இந்த காபனீரொட்சைட்டு வெளியேற்றத்தின் குறைவினை துல்லியமாக கணிப்பதனால் காலநிலை மாற்றத்தினாலான பாதிப்புக்களை ஓரளவிற்கேனும் தவிர்த்துக் கொள்ள வாய்ப்பு கிட்டியுள்ளது.

எமது நாட்டில் காடுகளின் வளம் மிகமுக்கியமானது. வடமாகாணத்தில் குறிப்பாக நெடுங்கேணியிலிருந்து வவுனியா வரையான வனப்பகுதி சிறப்புக்குரியது. ஆனால் அதனை கண் காணாது சிலர் மரங்களுக்கு தீ வைத்து எரித்து அதனை தங்களது பயன்பாட்டுக்கு பயன்படுத்த முனைகின்றனர். இந்த காட்டுப்பகுதி அரசுக்கு சொந்தமானது. இதில் தனியாருக்கு பயன்படுத்தவென இருக்கின்ற வளத்தை அழிக்கக் கூடாது.

காடுகள் எமது பொதுச் சொத்து. அதில் மக்களின் வாழ்வாதாரமும் உள்ளடங்கியிருக்கின்றது. எமக்கான பல் வகை வளங்களும் இருக்கின்றன. இந்த வளத்தை அழித்து விட்டு பின் காடுகளை உருவாக்குதல் என திட்டங்கள் தீட்டுவதில் எந்த பிரயோசனமுமில்லை. வனத்துறை இவ்வாறான காடுகளை அழிவிலிருந்து பாதுகாக்க ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுத்தல் வேண்டும். மரமொன்றை நடுகை செய்து விருட்சமாக வளர்வதற்கு எடுக்கும் காலங்கள் வருடக்கணக்கில் என்பதனால் அவ்வாறான மரங்களை வெட்டுவதனையோ அல்லது எரிப்பதனையோ நாம் தவிர்க்க வேண்டும்.

காடுகளை அழிப்பதற் கெதிரான நடவடிக்கைகளுக்கு புதிய தொழில்னுட்ப விருத்தி தேவைப்படுகின்றது. வருடந்தோறும் 10 மில்லியன் ஹெக்டேயர்கள் காடுகள் அழிக்கப்படுவதும் ஏறக்குறைய 70 மில்லியன் ஹெக்டேயர் காடுகள் இயற்கையான மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் காட்டுத்தீயினால் அழிக்கப்படுவதும் அளவிடப்பட்டுள்ளன. இதன் மூலம் இவ்வாறான அழிவுகளை தவிர்க்கக் கூடிய வழிவகைகளை முன் கூட்டியே அனுமானிப்பதற்கு காடுகளின் விஸ்தீரணம் அதிலேற்படும் இழப்புக்கள் என்பன துல்லியமாக கணக்கிடப்படல் வேண்டும். இவ்வாறான துல்லியமான கணிப்புக்கள் காடுகளை அழிவடைவதை முன் கூட்டியறியும் நிலைமையை உருவாக்குவதோடு காடுகளையே தஞ்சமென்றிருக்கும் அங்குவாழும் சுதேசிகளை மேம்படுத்தல் மற்றும் காடுகள் பற்றிய வரைபுகளை செம்மைப்படுத்தல் அதனுடன் காடுசார் காலநிலை நிதிநிலையை வரையறுக்கவும் இவ்வாறான தகவல்கள் பயன்படும். அதனால் காடுகளை விருத்தி செய்வதன் மூலமே நாம் இந்த உலகில் வாழக்கூடிய சூழல் உருவாகும் என்பதனை உணர்வோமானால் காடுகளை மீளுருவாக்கம் செய்யும் அனைத்து முறைகளையும் நடைமுறைப்படுத்துதல் அவசியமானதாகின்றது. தனிமனிதனால் இது சாத்தியமில்லை. மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து காடுகளை அழிப்பதை தடுப்பதோடு அதனை மீண்டும் மேம்படுத்திக் கொள்வதன் மூலமே மனித அழிவிலிருந்து காப்பாற்றிக் கொள்ள முடியும். எந்த கண்டுபிடிப்புக்களும் இயற்கையுடன் தோற்றே போய் விடுகின்றன. இருப்பதனை அழித்துவிட்டு புதியதை தேடுவதில் எதுவும் கிடைக்காது என்பதற்கு எமக்கு பாடம் தந்த இயற்கை அழிவுகள் முன்னுதாரணமாகும். காடுகளை பாதுகாப்பதோடு அதனை மேலும் விருத்தி செய்ய ஒவ்வொரு குடும்பமும் மனிதனும் செயற்படல் வேண்டும்.



# இன்று ஒரு தகவல் 77



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## வரம்

வரம் கொடுத்துவிட்டு மாட்டிக்கொண்டு முழிக்கிறது என்பது எல்லா இடத்திலேயும் இருக்கும் போல இருக்கு.....

பத்தமாசுரன் கதை தெரியுமல்லவா. பல பேருக்கு தெரிந்த விடயம் தான்.அவன் ஒரு அரக்கன். வலிமை ஜாஸ்தி. முனிவர்களையெல்லாம் அடிக்கடி தொந்தரவு செய்து கொண்டு இருந்தான்.

நாராதருக்கு இந்த விடயம் தெரிந்தது! சும்மா இருப்பாரா? உடனே புறப்பட்டு வந்தார். பத்மாசுரனைப் பார்த்தார். என்னப்பா? எப்படி இருக்கிறாய் என்று விசாரிச்சார்.

உங்களை மாதிரி சாதுவாக இருந்து விட்டால் உலகத்தில் ஒன்றும் தொந்தரவு இல்லை. என்னை மாதிரி இருக்கிறதில ஏகப்பட்ட கஷ்டம். எங்களை அழித்துவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். எங்களுக்கு யாரும் மரியாதை கொடுக்கிறதில்லையே என்று நொந்து கொண்டான் பத்மாசுரன்.

உடனே நராதர் அதற்கு ஒரு வழி சொன்னான். "இதோ பாருப்பா... இதற்கு ஏன் இப்படி பெரிசா கவலைப்பட்டுக் கொண்டு உட்காா்ந்திருக்கிறாய். வரம் கொடுக்கிறதுக்கு எப்பவும் தயாராக இருப்பவர் சிவன்! அதனாலே நீ என்ன செய்கிறாய் என்றால்... அவரை நினைத்துத் தவம் செய்! உடனே அவர் வந்துவிடுவார். என்ன வரம் வேண்டும் என்று கேட்பார் ஏதாவது ஒரு வரம் கேள். அதன் பிறகு உனக்கு மரியாதை அதிகமாகிவிடும் என்றார். என்ன வரம் கேட்கிறது என்றான் அவன். எதிரிகள் எல்லாம் உன்னைக் கண்டு பயப்பிட வேண்டும். அவ்வளவு தூரத்திற்கு ஏன்? உனக்கு வரம் கொடுத்த சிவனே உன்னைக் கண்டு பயப்பட வேண்டும். அது மாதிரி ஒரு வரம் கேட்டு வாங்கிக்கொள் என்றார் நாரதர். எது மாதிரி வரம் கேட்டால் எல்லோரும் பயப்பிடுவாங்க? என்று கேட்டான்.

அதாவது உன் கையை யார் தலையிலே வைத்தாலும் அவர் உடனே எரிந்து சாம்பலாகி விட வேண்டும்! அப்படி ஏதாவது ஒரு வரத்தை வாங்கிக்கொள் என்றார்.

சரி என்று சொல்லிவிட்டு உடனே புறப்பட்டுப்போனான். கடுமையான தவம் இருந்தான். சிவபெருமான் வந்து முன்னால் நின்றார். பத்மாசுரா! உன் தவத்தை மெச்சினேன்! என்ன வரம் வேண்டும் கேள் என்றார். நான் யார் தலையிலே கையை வைத்தாலும் உடனே அவர் எரிந்து சாம்பலாகிவிட வேண்டும் என்றான். சரி அப்படியே ஆகட்டும் என்று சொல்லி வரம் கொடுத்துவிட்டு போய்விட்டார்.

பத்மாசுரன் நடந்து வந்து கொண்டிருந்தான். வழியிலே நாரதர் வந்து கொண்டிருந்தார். விடயத்தைச் சொன்னான். அது சரி அவர் நிஜமாகவே வரம் கொடுத்து விட்டாரா? அதை நீ சோதித்துப் பார்த்தாயா? என்று கேட்டார். எப்படி சோதிக்கிறது? என்று கேட்டான். இது என்ன பெரிய விடயம்? யார் தலையிலேயாவது கையை வைத்துப் பார்க்க வேண்டியது தானே! என்றார். அப்படி என்றால் நீங்கள் கொஞ்சம் உதவி செய்ய வேண்டும். உங்கள் தலையைக் கொஞ்சம் காட்டுங்களேன் என்றான்!

இது ஏதுடா வம்பாப் போய்விட்டதே என்று எடுத்தார் ஓட்டம். இருந்தாலும் போற போக்கிலே ஒரு யோசனையை சொல்லிவிட்டு ஓடினார். என்னை சாம்பலாக்கி விட்டாய் என்றால் அதன் பிறகு உனக்கு யோசனை சொல்லுவதற்கு ஆள் இருக்காது அதனாலே உனக்கு வரம் கொடுத்தவர் தலையிலேயே கையை வைத்துப் பார் ! பலிக்க வில்லை என்றால் அவரையே பிடித்துக்கொள்ளலாம்! என்றார்.

அதுவும் சரிதான் என்று அவன் சிவனை தேடிக்கொண்டு புறப்பட்டு விட்டான். நாரதர் தப்பிச்சோம் பிழைச்சோம் என்று ஓடி வந்து திருமாலிடம் விடயத்தை சொன்னார். உடனே திருமால் புறப்பட்டு சிவனிடம் ஓடினார். அங்கே போனால் அவரை பத்மாசுரன் துரத்திக் கொண்டு இருந்தான்

திருமால் ஒரு யோசனை செய்தார். அழகான ஒரு பெண்ணாக மாறினார். மோகினி உருவம். பத்மாசுரன் அதைப் பார்த்தான் கிட்ட ஓடி வந்தான். என்னைக் கல்யாணம் செய்துகொள் என்றான். சரி செய்து கொள்ளுகின்றேன்! அதற்கு முன்பு நீ போய் நன்றாக குளித்து விட்டு எண்ணெய் தடவி தலையை சீவிக்கொண்டு வா! என்றது அந்த மோகினி. பத்மாசுரன் குளிப்பதற்கு ஓடினான். ஆற்றிலே இறங்கினான் தலையை தேய்க்கிறதிற்காக கையை தன் தலையிலே வைத்தான். அவ்வளவு தான் ஆள் குளோஸ்!

பலித்து விட்டது அவனே எரிந்து சாம்பலாகிவிட்டான். அப்பாடா என்று எல்லோரும் நிம்மதியாக மூச்சு விட ஆரம்பித்தார்கள். வரம் கொடுத்து விட்டு மாட்டிக் கொண்டால் இப்படியெல்லாம் செய்து தான் தப்பிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்காகத்தான் சொல்லுறது. அவசரப்பட்டு வரம் கொடுக்கிறதும் தப்பு! வாக்கு கொடுக்கிறதும் தப்பு! எப்பவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.அன்றைக்கு அப்படித்தான் சார் ஒருத்தர் என்னிடம் வந்தார் மனித நேயம் என்றால் என்ன? என்று கேட்டார்.

ஒருத்தருக்கொருத்தர் உதவியா இருக்கிறது என்றேன். அது ரொம்ப அவசியமா? என்றார். ஆமாம் என்றேன். அப்படி என்றால் ஒரு 50 ரூபாய் கை மாற்றாக கொடுங்கள் என்று வாங்கிக் கொண்டு போய் விட்டார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் இதுவரை சுமார் 39 ஆயிரம் கண்ணிவெடிகள் அகற்றம்

## ஸார்ப் நிறுவனம் தகவல்

(கண்டாவளை)


முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த எட்டு ஆண்டுகளில் இருபத்தெட்டு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து எழுநூற்று அறுபத்தெட்டு சதுர மீற்றர் பரப்பளவில் முப்பத்தொன்பதாயிரத்து நூற்று முப்பத்துநான்கு அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணியை முன்னெடுத்து வரும் ஸார்ப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிறுவனம் தொடர்ந்தும் கண்ணிவெடியகற்றும் பணிகளை புதுக்குடியிருப்பு, ஒலுமடு, மாங்குளம், கொக்காவில் மற்றும் ஆனையிறவிலும் துரிதகதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-315)



தேசிய நீர் தினத்தை முன்னிட்டு "பசுமையான தேசம் சுபீட்சமான நாளை" எனும் தொனிப்பொருளில் மன்னார் மடு வலயத்தில் மன்/கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் சுமார் 3 மில்லியன் ரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டத்தை இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் மடு வலயக்கல்விப்பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு வைபவ ரீதியாக திறந்து வைத்தனர். (படம்:-ஜோசப்நயன்)

# சர்வதேச நீர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவில் இரத்ததான முகாம்



(நெளுக்குளம்)

சர்வதேச நீர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மற்றும் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் "ஈடு இணையற்றது நம் உடலில் ஓடும் குருதி! அதை பிறர்க்கும் சிறிது பகிர்ந்தளிக்க ஏற்போம் இந்தநாளில் உறுதி!" எனும் தொனிப்பொருளில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இளைஞர்கள், குருதி கொடையாளர்கள், இராணுவத்தினர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மற்றும் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளையின் உறுப்பினர்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் குருதி வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-299)

# மாணவர்கள் நலன்கருதி

## பேருந்து சேவையை விரைவுபடுத்துங்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பெரிய இத்திமடு மாணவர்கள் தண்டுவான் பாடசாலைக்கு வந்து செல்வதில் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

முள்ளியவளை நெடுங்கேணி வீதியில் முல்லைத்தீவு, வவுனியாவுக்கான ஒரேயொரு பேருந்து மட்டும் காலையில் சென்று பிற்பகல் 3 மணிக்கு பின்னரே திரும்பும் நிலையில் காலையில் மாணவர்கள் பாடசாலைக்கு உரிய நேரத்தில் பெரிய இத்திமடு கிராமத்தில் இருந்து சென்றாலும் பிற்பகல் 3 மணிக்கே வீடு திரும்பக் கூடிய நிலைமை உள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையினர் தண்டுவான், பழம்பாசி பாடசாலை மாணவர்களின் நலன் கருதி சேவையில் ஈடுபட வேண்டும் என பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் தெரிவித்து குறித்த பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கவில்லை என பெற்றோர் விசனம் வெளியிட்டனர். (நி-5-6-350)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3072

### நெகாரா




### சிந்து




### குட்டி




### உஷாந்




### அஸ்வின்




### சர்வின்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர்

439





இலங்கைத் தீவின் வட பகுதியில் அப்போதெல்லாம் தமிழர்களே அதிகமாக வசித்து வந்தார்கள். அங்கங்கே ஜனங்கள் கும்பல் கும்பலாக நின்று "இளவரசர் அருள்மொழிவர்மர் வாழ்க!" "சேனாதிபதி கொடும்பாளூர் வேளார் வாழ்க!" என்று கோஷித்தார்கள். சில இடங்களில் ஜனங்கள் குதிரைகளைச் சூழ்ந்துகொண்டு பின் தொடர்ந்து வந்தார்கள். வரவரப் பின் தொடர்ந்து வரும் கூட்டம் அதிகமாகிக் கொண்டு வந்தது. குதிரைகள் வேகமாகப் போக முடியவில்லை.

இளவரசர் சேனாதிபதியுடன் இதைப் பற்றி விவாதித்ததின் பேரில் இராஜ பட்டையிலிருந்து விலகிக் காட்டு வழியில் போவதென்று தீர்மானமாயிற்று. ஜனங்களை மெதுவாகக் கழித்துக்கட்டி விட்டு அவர்கள் காட்டு வழியில் பிரவேசித்தார்கள். காட்டு வழியில் இயற்கை இடையூறுகள் காரணமாக வேகமாகப் போக முடியவில்லை. கொஞ்சத் தூரம் போனதும் தாமரைத் தடாகம் ஒன்று தென்பட்டது. அதன்கரைக்கு வந்ததும் எதிர்க்கரையில் ஒரு பெரிய ஜனக்கும்பல் நிற்பது தெரிந்தது. இவர்களைப் பார்த்தவுடனே அந்த ஜனக் கும்பலின் மத்தியிலிருந்து தாரை, தப்பட்டை, கொம்பு, பேரிகை முதலிய வாத்தியங்களின் பெருமுழக்கம் கிளம்பிற்று.

"கொஞ்சம் இருங்கள் நான் போய் அவர்கள் யார் என்று பார்த்துவிட்டு வருகிறேன்!" என்று கூறிவிட்டுச் சேனாதிபதி குதிரையைத் தட்டி விட்டுக் கொண்டு முன்னதாகச் சென்றார். சிறிது நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்து, "இளவரசர் இந்த வழியில் வருவது எப்படியோ பக்கத்துக் கிராமவாசிகளுக்குத் தெரிந்து போயிருக்கிறது. இளவரசருக்கு மரியாதை செய்யத்தான் அவர்கள் வந்திருக்கிறார்கள்!" என்றார்.

ஜனங்கள் நெருங்கி வந்தார்கள். இளவரசரைச் சுற்றிச் சுற்றி வந்து அடங்காத ஆர்வத்துடன் பார்த்தார்கள். பல வகை ஜய கோஷங்களையும் வாழ்த்தொலிகளையும் கிளப்பினார்கள். அவற்றில் "ஈழத்தரசர் அருள்மொழிவர்மர் வாழ்க!" என்ற கோஷம் மட்டும் பிரதானமாயிருந்தது.

இளவரசர் முகத்தில் புன்னகை மலர்ந்தது. அந்த ஜனக்கூட்டத்திற்குத் தலைவன் என்று தோன்றிய ஒருவனை அருகில் அழைத்தார். "இவர்கள் எதற்காக எனக்கு ஈழத்து அரசுப் பட்டம் கட்டுகிறார்கள்?" என்று கேட்டார்.

அவன் மிகப் பணிவுடன், "அரசே பன்னெடுங்காலமாக இந்த ஈழநாடு நிலையான அரசு இல்லாமல் அவதிப்பட்டு வருகிறது. பொன்னியின் செல்வர் ஈழ நாட்டின் மன்னர் ஆக வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை. இந்நாட்டில் வாழும் எல்லா ஜனங்களுடைய விருப்பமும் அதுதான். தமிழர்கள், சிங்களவர்கள், சைவர்கள், பௌத்தர்கள், துறவிகள் இல்லறத்தார் எல்லாரும் அதையே விரும்புகிறார்கள்" என்று கூறினான்.

இளவரசருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் விருந்து அளிக்க அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். விருந்தை ஏற்றுக் கொள்ளாமல் போக முடியவில்லை. விருந்துண்ட பிறகு விடை பெற்றுப் புறப்படுவதற்கு வெகு நேரமாகிவிட்டது.

இளவரசருக்கு உபசாரங்கள் நடந்து கொண்டிருந்த சமயத்தில் வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும் தனித்துப் பேசிக் கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது.

"தம்பி! பார்த்தாயா? இதெல்லாம் சேனாதிபதியின் சூழ்ச்சி என்று தெரியவில்லையா? முன்னாலேயே அவசரமாகச் செய்தி அனுப்பி இந்த உபசாரங்களையெல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறார்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"சேனாதிபதியின் ஏற்பாடுதான் என்று ஒருவாறு தெரிகிறது. ஆனால் இந்தச் சூழ்ச்சியின் நோக்கம் என்னவென்று தெரியவில்லையே? இப்படியெல்லாம் இந்தத் தீவில் வாழும் ஜனங்கள் சொல்வதைக் கேட்டு இளவரசர் நேற்று வேண்டாம் என்று மறுத்த சிம்மாசனத்தின் பேரில் இன்றைக்கு ஆசை கொண்டு விடுவார் என்ற எண்ணமா?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"அது ஒரு நோக்கமாயிருக்கலாம். அதைக் காட்டிலும் முக்கியமானது நம் பிரயாணத்தைத் தாமதப்படுத்துவது தான்!" என்றான் ஆழ்வார்க்கடியான். (தொடரும்...)

---



# சிறுவர் அரங்கம்

## வீரச் செயல்



முன்னொரு காலத்தில் ரத்தினபுரி நாட்டை ஆண்டு வந்த அரசர், தன் மந்திரி வர்மனிடம் பேசிக் கொண்டு இருந்தார். அவர்களின் பேச்சு அறிவுக்கூர்மை பற்றி இருந்தது.

"அறிவுக்கூர்மை உடையவர்களால் எதையும் செய்து முடிக்க முடியும்". அவர்களால் செய்ய இயலாத செயலே இல்லை என்று கூறினான் மந்திரி.

அவன் கருத்தை அரசர்ஒப்புக் கொள்ளவில்லை.

"அரசே! செய்ய இயலாத செயல் ஒன்றைச் சொல்லுங்கள்... நான் அதைச் செய்து காட்டுகிறேன்" என்றான் மந்திரி!

"மந்திரியே! நீ ஏதேனும் வீரச் செயல் செய்யப் போவதாகச் சொல்ல வேண்டும். அதற்காக மக்கள் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். அதைச் செய்யாமல் அவர்களிடமிருந்து தப்பிக்க வேண்டும். உன்னால் முடியுமா? என்றார் அரசர்.

"அரசே! மிக எளிய செயலைத்தான் சொல்லி இருக்கிறீர்!" என்றான் மந்திரி.

"மந்திரியாரே! நீ நினைப்பது போல் இது எளிய செயல் அல்ல. வீரச் செயல் செய்வதாகச் சொல்லி, மக்களின் கூட்டத்தைக் கூட்டுவது எளிது. பிறகு அதைச் செய்யாவிட்டால், அந்தக் கூட்டம் உன்னைத் தப்பிக்க விடாது. நீ அவமானப்படத்தான் போகிறாய்" என்றார்.

"அரசே! இதில் எனக்கு எந்த அவமானமும் ஏற்படாது. பொறுத்திருந்து பாருங்கள்" என்ற மந்திரி அங்கிருந்து சென்றான்.

சில நாட்கள் சென்றன மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வதைப் பார்த்தார் அரசர்.

வியப்படைந்த அவர் தன் வேலையாட்களிடம், மக்கள் கூட்ட மாக எங்கே செல்கின்றனர்? என்று கேட்டார்.

அரசே! எல்லோரும் கோயிலை நோக்கிச் செல்கின்றனர். அங்கே கோபுரத்தின் உச்சியில் மந்திரி நின்று கொண்டிருக்கிறார். இன்னும் சிறிது நேரத்தில் கீழே குதிக்கப் போகிறேன் என்று கத்திக் கொண்டிருக்கிறார். அதை வேடிக்கை பார்க்கத்தான் எல்லாரும் சென்று கொண்டிருக்கின்றனர்" என்றான்.

தான் வைத்த சோதனையின் முதல் பகுதியை செய்துவிட்டான். இதிலிருந்து அவன் எப்படி தப்பிக்கப் போகிறான்? அதைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவருக்கு ஏற்பட்டது.

என்ன நடக்கிறது என்பதை வேடிக்கை பார்க்க அவரும் அருகே சென்றார்.

கோபுரத்தின் உச்சியில் மந்திரி நின்றிருந்தான்.

இன்னும் சிறிது நேரத்தில் கீழே குதிக்கப் போகிறேன். இப்படி யாரும் இதுவரை செய்தது இல்லை என்று கத்திக் கொண்டிருந்தான்.

அவன் குதிப்பதை வேடிக்கை பார்க்க நகர மக்கள் எல்லாரும் அங்கே வந்திருந்தனர்.

நான் ஒன்று, இரண்டு என்று பத்து வரை எண்ணப் போகிறேன். பத்து என்று சொன்னதும், கீழே குதிக்கப் போகிறேன். நான் பேச்சு தவற மாட்டேன். என் வீரச் செயலைப் பார்க்கத்தான் போகிறீர்கள் என்று அவன் ஒன்று, இரண்டு என்று எண்ணத் தொடங்கினான்.(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வினோத உடைப் போட்டிக்கும் வில்லங்கம் வந்துவிட்டது!

பாடசாலைகளில் இடம்பெறும் இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வின்போது, பார்வையாளர்களைக் கவருகின்ற விடயம் வினோத உடைப் போட்டியாகும்.

ஆம், நடிப்புத் திறனும் உருவகத் திறனும் உடைய மாணவர்கள் தங்களின் ஆற்றலை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டு நம் கல்வியாளர்கள் வினோத உடைப் போட்டிக்குக் களம் அமைத்துக் கொடுத்தனர்.

விளையாட்டுப் போட்டியின் இடைவேளை நிகழ்வாக நடைபெறுகின்ற வினோத உடைப் போட்டிக்கு மூன்று நான்கு நடுவர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் புள்ளியிடுவர்.

இங்கு வினோத உடைப் போட்டி என்றதும் அதனை யாரும் அலட்சியம் செய்துவிடக் கூடாது.

ஆம், வினோத உடைப் போட்டியில் வெற்றி பெறுவதற்கு தனித்து நடிப்பு மட்டும்போதுமானதல்ல.

மாறாக எடுத்துக்கொண்ட பாத்திரம், அதற்கேற்றாற்போல அணியப்படும் உடை, குறித்த பாத்திரம் மக்களுக்கு எடுத்துக் கூறுகின்ற கருத்தியல் ஆகிய விடயங்களும் அங்கு முக்கியத்துவம் பெறும்.

இதனை நாம் கூறும்போது, வினோத உடைப் போட்டியின் சிறப்பு என்பது நிகழ்கால சம்பவங்களை, அது ஏற்படுத்திய தாக்கத்தை தத்ரூபமாக வெளிப்படுத்துவதாகும்.

அந்தவகையில் தற்போது வட மாகாணப் பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றபோது அதில் இடம்பெறும் வினோத உடைப் போட்டிகளில் சமகால நிகழ்வுகளை மாணவர்கள் தத்ரூபமாக எடுத்துக் காட்டுகின்றனர்.

உதாரணத்துக்கு இன்றைய பொருளாதார நெருக்கடியால் ஏழைக் குடும்பங்கள் படும் அவஸ்தை, வெடுக்குநாறிமலையில் சிவனுக்கு நடக்கின்ற அநீதி போன்ற விடயங்களை மாணவர்கள் வினோத உடைப் போட்டிக்கான கருத்தியலாகக் கொண்டு தமது நடிதிறனைக் காட்சிப்படுத்துகின்றனர்.

எனினும் பேரினவாதம் தலைக்கேறி இருக்கக்கூடிய இந்த நாட்டில், மாணவர்களின் மேற்குறித்த கற்பனைத் திறனும் நடிப்பு ஆற்றலும் புலனாய்வு அறிக்கையாக ஆக்கப்படும்போது, யார் தான் என்ன செய்ய முடியும்.

கடவுளே! இந்தியத் திரைப்படங்களில் 90 வீதமானவை; அரசாங்கம் செய்கின்ற அநீதியை, பொலிஸ் அராஜகத்தை, அரசியல்வாதிகளின் ஊழலை, அரச பணியாளர்களின் மோசடிகளை அம்பலப்படுத்துவதாக தயாரிக்கப்பட, அதற்குத் திரைப்படத் தணிக்கைக்குழுவும் அனுமதி வழங்குகிறது.

ஆனால் இங்கோ தமிழ் மாணவர்கள் யதார்த்தத்தை சிந்திப்பதற்கும் அநீதிகளை எதிர்ப்பதற்கும் கூட தடை விதிக்கப்படும்போது, இனி வினோத உடைப் போட்டிக்கும் வில்லங்கம் வந்துவிட்டதென்பதை உறுதிப்படுத்தலாம்.

# வடக்கு விவசாயிகளின் மின்கட்டணத்தை குறைப்பதற்கான அமைச்சரவை பத்திரம்

## சமர்ப்பிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடபகுதி விவசாயிகளின் மின்கட்டணத்தை குறைப்பதற்கான அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

விவசாயம் தொடர்பில் வடபகுதி விவசாயிகள் காண்பிக்கும் அர்ப்பணிப்பை கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாய அமைச்சிற்கு ஒதுக்கப்படும் நிதியில் அதிகளவான நிதியை வடக்கு-கிழக்கு அபிவிருத்தி திட்டங்களிற்கு ஒதுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

30 வருடகால யுத்தத்தினால் வடபகுதி மக்கள் பெரும்துன்பங்களை அனுபவித்தனர். ஆனால் அந்த நெருக்கடிகளின் மத்தியிலும் அவர்கள் விவசாயத்தை கைவிடவில்லை.

வடபகுதி விவசாயிகள் மின்கட்டண நிவாரணங்களை கோரியுள்ளனர் என தெரிவித்துள்ள அமைச்சர் இதனடிப்படையில் அவர்களின் மின்கட்டணங்களை குறைப்பதற்கான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார். (நி-5-6)

## அபிவிருத்தி அலுவலர் சேவை சங்கத்தினரால் போராட்டம் முன்னெடுப்பு

(கொழும்பு)

அபிவிருத்தி உத்தியோகத்தர்களை விசேட தரம் ஒன்றிற்குள் உள்வாங்க வேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இன்று மதியம்12 மணிக்கு கொழும்பு பொது நிர்வாக அமைச்சிற்கு முன்னால் அபிவிருத்தி அலுவலர் சேவை சங்கத்தினரால்போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (நி-5-6)

## தற்காலிக வீதித்தடை

(யாழ்ப்பாணம்)

வண் வடமேற்கு நாவலடி பேச்சியம்பாள் ஆலய மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளதால் துரைராஜா வீதி-நாவலடி வீதிச் சந்தியிலிருந்து முருகமூர்த்தி வீதி, நாவலடி வீதி சந்தி வரையான நாவலடி வீதியானது எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் வாகனப்போக்குவரத்திற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

இக்காலத்தில் இவ்வீதியினை பயன்படுத்துவோர் மாற்றுப் பாதையைப் பயன்படுத்துமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் ச.கிருஷ்னேந்திரன் அறிவித்துள்ளார். (நி-5-6)

## இலங்கை வந்த கப்பல் விபத்து பலர் உயிரிழந்துள்ளதாக அச்சம்

### அமெரிக்காவில் பயங்கரம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மேரிலாந்தில் உள்ள பெல்ட்டிமோர் துறைமுகத்தில் இருந்து இலங்கை நோக்கி பயணித்த பாரிய கப்பல் ஒன்று பாலத்தில் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த பாலம் முழுமையாக இடிந்து வீழ்ந்துள்ளமையினால் பேரனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக மீட்பு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அப்போது பாலத்தில் சுமார் 4 வாகனங்கள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றதாக கடலோர காவற்படை தெரிவித்துள்ளது.

1977 ஆம் ஆண்டு திறக்கப்பட்ட இந்தப் பாலம் ஆற்றின் குறுக்கே செல்கிறது. இது ஒரு பயங்கரமான அவசரநிலை என பெல்ட்டிமோர் தீயணைப்புத் துறையின் தகவல் தொடர்பு இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இப்போது எங்கள் கவனம் இந்த மக்களை மீட்டு மீட்கும் முயற்சியில் உள்ளதென குறிப்பிட்டுள்ளனர்.

இந்த அனர்த்தம் காரணமாக பலர் உயிரிழந்திருக்கலாம் என மீட்பு குழுவினர் அச்சம் வெளியிட்டுள்ளனர். (நி-5-6)

# காணிகளை விரைவில் விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கேப்பாப்புலவு மக்கள் கோரிக்கை

(நெளுக்குளம்)

காணிகளை விடுவிப்பது தொடர்பில் இதுவரை தனக்கு உறுதியான முடிவு கிடைக்கவில்லை என முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் தெரிவித்ததாக கேப்பாபுலவு மக்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு கேப்பாப்புலவு மக்கள் தமது காணிகளை விரைவில் விடுவிக்கக்கோரி ஜனாதிபதிக்கும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங் அதிபரிடமும் மகஜர் ஒன்றை கடந்த 11.03.2024 அன்று கையளித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் கேப்பாபுலவு மக்கள்மீண்டும் மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது தமது காணிகளை விடுவிப்பது தொடர்பில் உறுதியான முடிவு இதுவரை கிடைக்கவில்லை என மாவட்ட செயலாளர் தெரிவித்ததாக கேப்பாப்புலவு மக்கள் தெரிவித்தனர்

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த மக்கள் பல போராட்டங்கள் செய்தும் இதுவரைதீர்வு இல்லை என்றும் தமது காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தவறினால் மீண்டும் தொடர் போராட்டங்களில் ஈடுபடவுள்ளதாக கேப்பாப்பிலவு மக்கள் தெரிவித்தனர். (நி-5-6-299)

# பயன்தரு மரங்களை அழிக்கும் யானைகள்

(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் குளம் பூநகரி முட்கொம்பன் ஆகிய பிரதேசங்களில் காட்டு யானைகளால் பெருமளவான பயன் தரு மரங்கள் சேதப் படுத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அக்கராயன் குளம், மணி யங்குளம், கோணாவில் போன்ற பகுதிகளில் தென்னை, வாழை, பலா போன்ற பயன் தரும் மரங்கள் தொடர்ச்சியாக காட்டு யானைகளால் அழிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பூநகரி பிரதேச செயளாளர் பிரிவுக்குட்பட்ட முட்கொம்பன், அரசபுரம், செக்காலை ஆகிய பகுதிகளிலும் தென்னை மரங்கள், வாழை, கமுகு போன்ற மரங்கள், பயிரிடப்பட்டுள்ள பூசணி மற்றும் மரவள்ளி போன்ற பயிர் களையும் காட்டு யானைகள் அழித்துள்ளன எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்தனர். (நி-5-6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

31

தமிழர்களின் 2 நூற்றாண்டு அரசியலை உள்வாங்கிய கலைஞர் கருணாநிதியின் தலைமையில் நடைபெறும் இந்த செம்மொழி மாநாடு, செய்யப்போவது என்ன என்பது குறித்த எதிர்பார்ப்புடன், தமிழ் உலகம் காத்திருந்தது. அந்த எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் மாநாடாக, உலகத்தமிழ் செம் மொழி மாநாடு கோலாகலமாக நிறைவு பெற்றது.

இம் மாநாடு 2010ஆம் ஆண்டு ஜூன் 23 முதல் ஜூன் 27 வரையிலான 5 நாட்கள் கோயம்புத்தூரில் கொடிசியா வளாகத்தில் நடைபெற்றது. கோயம்புத்தூரில் 2010 இல் நடைபெற இருந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு ஈடாகத் தமிழக முதல்வர் மு. கருணாநிதி இந்த மாநாட்டை ஒருங்கிணைத்து இருந்தார். தமிழ் இணைய மாநாடும் இந்த மாநாட்டுடன் சேர்த்து நடத்தப்பட்டது. நிறைவு விழாவில் தமிழக முதல்வர் கருணாநிதி உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் சிறப்பு தபால் தலையை வெளியிட்டு வைத்தார்.

**உலகைத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்துவது ஏன்? முதல்வர் கருணாநிதியின் விளக்கம்**

'உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்துவது ஏன்' என்பது குறித்து, முதல்வர் கருணாநிதி விளக்கம் அளித்திருந்தார். உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி, தூர்தர்ஷன் 'T.V' மற்றும் ரேடியோவில், முதல்வர் கருணாநிதி ஆற்றிய உரை கீழே தரப்படுகிறது.

இதுவரை, எட்டு உலகத் தமிழ் மாநாடுகள் நடந்துள்ளன. தற்போது கோவையில் நடக்கும் மாநாடு, அவற்றையெல்லாம் விட ஒரு சிறப்பை வலியுறுத்தி நடக்கும் மாநாடு. தமிழ், "செம்மொழி" என அறிவிக்கப்பட்ட பின் நடக்கும் முதல் மாநாடு.

உலகில் 6,880 மொழிகள் உள்ளன. இதில், 2,000 மொழிகள் மட்டுமே முக்கியத்துவம் பெற்றுள்ளன. அவற்றுள், "கிரேக்கம், லத்தீனம், அரேபியம், பாரசீகம், சீனம், ஹீப்ரு, சமஸ்கிருதம்' ஆகிய ஏழு மொழிகள் மட்டுமே செம்மொழி தகுதியைப் பெற்றுள்ளன. இந்த வரிசையில், தமிழும் செம்மொழி எனும் சிறப்பை தற்போது பெற்றுள்ளது.

தமிழ், மற்ற செம்மொழிகளை விட மேலானது. லத்தீன், ஹீப்ரு மொழிகள் இன்று பயன்பாட்டில் இல்லை. கிரீக் இடையில் நசிந்து தற்போது வளமடைந்து வருகிறது. சமஸ்கிருதம் பேச்சு வழக்கில் இல்லை. சீனம், பட எழுத்து முறையில் உள்ளது. அரேபியம், காலத்தால் மிகவும் பிந்தியது. பாரசீகம், அரேபிய வரி வடிவத்தில் எழுதப்படுகிறது.

தமிழோ 2,500 ஆண்டுகள் தொடர்ச்சியான இலக்கியங்களைக் கொண்டுள்ளது. தமிழின் இலக்கண நூலான தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. எல்லா மொழிகளிலும் எழுத்துக்கும், சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் உண்டு.

இல்லற வாழ்க்கைக்கும் அகம், புறம் என வகுத்து இலக்கணம் கூறுவது உலக மொழிகளிலேயே தமிழ் ஒன்றுதான் இது தமிழின் தனிச் சிறப்பு. தமிழ் வேறு மொழிகளை சார்ந்திருக்கவில்லை, தனித்தன்மை வாய்ந்தது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு முதலியன திராவிட மொழிகள் எனப்படுகின்றன. இந்த மொழிகளுக்கு மூல மொழியாக தமிழ் விளங்குகிறது என கால்டுவெல் கூறியுள்ளார். அவர் 12 திராவிட மொழிகளை ஆராய்ந்து எழுதியுள்ளார்.

"மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற நூல், இந்த உண்மையை உரைக்கிறது. தமிழ் உலகில் உள்ள அனைவருக்கும் பொதுவான நீதியையும், ஒழுக்கத்தையும், அறமாண்புகளையும் கூறுகிறது. 2,000 ஆண்டுகளுக்கு முன்னே செம்மொழி சிறப்பை தமிழ் அடைந்திருந்தாலும், அதற்கு முறையான ஒப்புதல், 2004இல் தான் கிடைத்துள்ளது.

இந்த பெருமையை கொண்டாடும் வகையில் தான், கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடக்கிறது. கலிபோர்னியா பல்கலை தமிழ்த்துறைத் தலைவர் ஜார்ஜ் ஹார்ட், பின்லாந்தைச் சேர்ந்த அஸ்கோ பர்போலா உட்பட 49 நாடுகளில் இருந்து 536 தமிழ் அறிஞர்கள் வருகின்றனர். இந்தியாவில் இருந்து, 5,000 பேர் பங்கேற்கின்றனர்.

பல்வேறு அரங்குகள், கலை நிகழ்ச்சிகள் நடக்கும் மாநாட்டிற்கு வந்து செல்வோருக்கு வசதியாக சிறப்பு ரயில்கள், பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சிறப்பு தபால் தலை வெளியிடப்படுகிறது. தமிழின் மேன்மையை உலகுக்கு உணர்த்த நடக்கும், செம்மொழி மாநாடு, உலகத் தகவல் தொழில்நுட்பவியல் மாநாட்டிற்கு அனைவரையும் வரவேற்கிறேன். இவ்வாறு முதல்வர் உரை நிகழ்த்தினார்.

**மாநாட்டை அதிமுக, மதிமுக கட்சிகள் புறக்கணித்தன**

திமுக தலைமை வகிக்கும் தமிழக அரசால் ஒருங்கிணைக்கப்படும் செம்மொழி மாநாட்டை அதிமுக, மதிமுக கட்சிகள் புறக்கணித்தன. "கருணாநிதியால் நடத்தப்பெறும்உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடுஎன்பது, சர்வதேச தமிழ்ஆராய்ச்சி சங்கத்தின் உலகத் தமிழ்மாநாடு வரிசையில் இடம்பெறாததால்,இந்தமாநாட்டில் அதிமுக கலந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. எனவே திமுக அரசால் நடத்தப்படும் இந்த உலகைத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டை அதிமுக புறக்கணிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார் ஜெயலலிதா.

அதேபோல உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் மதிமுகவும் பங்கேற்காது என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ அறிவித்தார். "மாநடு கூடுவதில் அரசியல் நோக்கு யாதும் இல்லையென்றும், உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் பங்கேற்பு உண்டு என்றும் முதலமைச்சர அறிக்கைவிடுத்தார்.

ஈழத்தமிழர்கள் பெரும் அழிவைச் சந்தித்து வதை முகாம்ங்களில் இருக்க உலகத் தமிழாராய்ச்சி அல்லது உலகத் தமிழ்ச்செம்மொழி மாநாடு பொருத்தமானதா என்று கனடா தமிழ்ப்படைப்பாளிகள் கழகம் கேள்வி விடுத்தது.

"பக்கத்து நாட்டில் தமிழர்கள் துடிக்க, துடிக்க படுகொலை செய்யப்பட்டபோது, தமிழுணர்வோடு எதுவும் செய்யாமல் இருந்துவிட்டு, இன்றும் அகதிகள் முகாமில் பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் அடைக்கப்பட்டுள்ள நிலையில், இந்தச் செம்மொழி மாநாடு அவசியமான ஒன்றா என்று மலேசியா பினாங்கு மாநில துணை முதல்வர் பேராசிரியர் இராமசாமி விமர்சித்தார்.

தமிழர்களாக இருந்ததால், பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்ட, சிறைப்பட்ட சூழலில் மொழியைக் கொண்டாடுவது தமிழறிஞர்களின் சுயநலம் ஆகும். முதலில் எதிர்ப்புத் தெரிவித்த பல அறிஞர்கள் பின்னர் சேர்ந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல்கலாம் அவர்களை அழைக்கவில்லை என்கிற செய்தி பலஊடகங்களிலும் இணையத்தளங்களிலும் விமர்சனத்துக்கு உள்ளாகியது.

யூன் 6, 2004- தமிழ் செம்மொழியாகஅறிவிக்கப்பட்டநாள் ஆகும். தமிழ்மொழிக்குச் செம்மொழித்தகுதி கிடைத்த நாளான 12.10.2013 ஆம் நாள் தமிழ் செம்மொழி நாளாக செம்மொழி தமிழாய்வு மத்தியநிறுவனம் கொண்டாடி வருகின்றது.

தமிழின் செம்மொழித் தகுதிக்குத் திருக்குறள் மற்றும் சங்க இலக்கிய நூல்களான எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்குநூல்கள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், இறையனார்களவியல் போன்ற பல நூல்கள் உள்ளன.

**திராவிடமொழிகள்**

தென் இந்தியாவில் வழங்கும் மொழிகளைத் திராவிடமொழிகள் எனப் பெயரிட்டு அழைத்தவர் டாக்டர் கால்டுவெல் ஆவார். அவர் அயர்லாந்து நாட்டு அறிஞர் தமிழகம் வந்தவர். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை 1856 இல் வெளியிட்டார்.

'தமிழ்மொழி சமஸ்கிருதத்திலிருந்து வந்தமொழி அன்று மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்றவற்றுடன் சேர்ந்து தனி மொழிக் குடும்பமாகத் திகழ்வது. எல்லாம் சேர்ந்து திராவிட மொழிகள் எனப்படும். திராவிட மொழிக் குடும்பத்தில் தமிழ்தான் பழமையானது. சமஸ்கிருதத்தைப் போன்று தமிழும் தனித்து இயங்கவல்லது. திராவிட மொழிக் குடும்பத்தைச்சேர்ந்ததமிழுக்கும், ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த சமஸ்கிருதத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று கால்டுவெல் நிறுவினார்.

தமிழின் தொன்மை, தனித்துவம் நிறுவப்பட்டது. எழுத்து வடிவமும், இலக்கியங்களையும் உடையமொழிகளைத் திருந்திய மொழிகள் என்றும், எழுத்து வடிவமும், இலக்கியங்களும் இல்லாத மொழிகளைத் திருந்தாத மொழிகள் என்றும் கால்டுவெல் பாகுபாடு செய்துள்ளார். அதன் படிதமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய ஐந்து மொழிகள் திருந்திய மொழிகள் என்றும், தோடா, கோண்டு, கூ, கோடா என்ற நான்கு மொழிகள் திருந்தாத மொழிகள் என்றும் 1856 இல் குறிப்பிட்டுள்ளார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்குபஞ்சர்...

வலிகளை போக்குவதாக முழங்கால்களில் ஊசிகளை குத்தி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

சிகிச்சையின் பின்னர் கடுமையான வலிகள் ஏற்பட்டமையால், யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனையின்போது, அக்குபஞ்சர் சிகிச்சை என தவறான முறைகளில் செலுத்தப்பட்ட ஊசிகள் மூலம் கிருமித் தொற்றுக்கள் ஏற்பட்டு, அவை உடல் முழுவதும் பரவியதால் மரணம் சம்பவித்துள்ளது என கண்டறியப்பட்டுள்ளது. (ம-7,10,33)

## கடவுச்சீட்டு...

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ள முருகன், ஜெயக்குமார், ரொபேர்ட் பயஸ் ஆகியோர் தாய்நாடு திரும்புவதற்கு இலங்கைத் துணைத் தூதரகத்தால் கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த மூவரும் எதிர்வரும் ஒரு வாரத்திற்குள் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் என தமிழ்நாட்டு அரசாங்கம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

முன்னாள் இந்திய பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டனைக்குட்படுத்தப்பட்டு 30 ஆண்டுகளாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி, ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் உள்ளிட்ட 7 பேர் இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் 2022ஆம் ஆண்டு சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்டவர்களில் நளினியின் கணவர் முருகன் உட்பட சாந்தன், ஜெயக்குமார், ரொபேர்ட் பயஸ் ஆகிய நால்வர் இலங்கையைச் சேர்ந்தவர்கள்.

அத்துடன் குறித்த நால்வரும் திருச்சி சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் உடல்நலம் பாதிக்கப்பட்டதையடுத்து சாந்தன் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது

குறித்த வழக்கு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார் குமரேஷ் பாபு ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது முருகன், ஜெயக்குமார், ரொபேர்ட் பயஸ் ஆகியோர் இலங்கைக்குச் செல்வதற்கு இலங்கை துணைத் தூதரகம் கடவுச்சீட்டு வழங்கியுள்ளதாக தமிழ்நாடு அரசு தகவல் வெளியிட்டுள்ளது. (ம-7,10)

## இளம் குடும்பஸ்...

இடம்பெற்றுள்ளது.

இதில் கிளிநொச்சியைச் சேர்ந்த சுதன்ராஜ் (வயது-41) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார்ச் சைக்கிளுடன் சொகுசு பேருந்து மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கைதடியில் கல்வி கற்கும் தனது பிள்ளைகளை பார்வையிட வந்த வேளையிலேயே இவ் அனர்த்தம் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10,30,33)





மஹஜன சம்பத
திகதி 2024.03.26
சீட்டிழுப்பு இலக்கம் 5431
Z 6 5 1 4 2 0

அத சம்பத
Z 1 4 2 0
சீட்டிழுப்பு இலக்கம் 006

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.26
சீட்டிழுப்பு இலக்கம் 0740
தனுசு 07 14 32 51 தனுசு
14729 10

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3673
சீட்டிழுப்பு திகதி 26.03.2024
Q 25 40 50 74
Q 02646

லக்கி 7 VIP
திகதி 2024.03.26
சீட்டிழுப்பு இலக்கம் 0257
P 4 9 1 8 1 1 P

மெகா பவர்
திகதி 26/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1779
K 11 15 25 58 68
36905

தன நிதானய
திகதி - 2024.03.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1461
T 43 56 64 80 T
48967

உத்தியோகபூர்வ முடிவுகள்
26.03.2024 வெற்றி வாரம் 139 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து S
7 7 5 9 3 8
48814 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் 31,951,384.00
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

SUPER BALL
2405 26.03.2024 செவ்வாய்
22 61 65 75 U
65154
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,430,167.20

சனிதா
திகதி 2024.03.26 வெற்றி வாரம் 4566 வர்ணம் பச்சை
14 36 58 71 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,258,433.60

சசிரி
வெற்றி வாரம் 459
2024.03.26
20 41 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,822,200/-

சீட்டிழுப்பு வாரம் 4117 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.03.26 தினம் செவ்வாய்க்கிழமை
17 18 42 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 14,050,830.00
530468

கப்றக
T 01 16 17 22 65
1581
213004
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 514,181,379.00
2024.03.26 செவ்வாய்

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2231
சீட்டிழுப்பு திகதி : 2024.03.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.101,986,028.80
40 60 69 73 N
455439

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0013) 076 825 7716 (ஆகாஸ்)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0012)

**யாழ்.கச்சேரிக்கு அருகில்**
**காணி உடன் விற்பனைக்கு**
**(விலை குறைக்கப்பட்டது)**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 ½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக்கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. மொத்தமாக 5 கோடியே 25 இலட்சம்
(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)
தொடர்புகளுக்கு:
+447963743585 (Whatsapp)
021 222 7141 (Sri Lanka)
Email : jamesraj_uk@yahoo.co.lk (225)

**கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு**

தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.
A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து
(C-0012)
V2 GUEST 0743900360 0743900361

**விற்பனைக்கு**

01. லயன் பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
02. தனங்கிளப்புச் சந்திக்கு அருகாமையில் காணி விற்பனைக்குண்டு. (259)

077 172 1074

**வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை**

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு: (251)
074 17 37 684

**வாகனங்கள் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள பொலிரோ, TATA Super Ace மற்றும் செனோன் வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு (267)
077 865 8557

**வேலைவாய்ப்பு**

கொழும்பு வெள்ளவத்தையில் இயங்கிவரும் பொதிகள் சேவை நிறுவனத்துக்கு A/L படித்த கணனி அறிவுடையோர் தேவை.
தங்குமிட வசதி,
உணவு வழங்கப்படும் (268)
070 375 0002

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி கரந்தன் வீதியில் பருத்தித்துறை வீதியிலிருந்து 300 M தூரத்திலும் கரந்தன் சந்தியிலிருந்து 100M தூரத்திலும் பேக்கரி ஒழுங்கையில் மேற்கு பக்க 3ம் சதுர காணி நாலு (4) பரப்பு விற்பனைக்குண்டு.
077 959 1320
077 358 3750 (238)


## அரசின்...

பெற்ற பல கலைக்கழக விரிவுரையாளர்களுடான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை அண்மையில் களனிப் பல்கலைக்கழக திறப்பு விழாவில் கலந்துகொண்டபோது சிலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருந்த போதிலும், தமது பொறுப்பு மற்றும் கடமையை நிறைவேற்றுவதற்கு தான் தவறவில்லை எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-7,10)


**மாப்பிள்ளை தேவை**


- நல்லூர் - உடுப்பிட்டி, இந்து கௌரவ குலம் 1993 சதயம்.BSc, MSc, அழகான Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 28583
- கைதடி - இந்து கௌரவகுலம் , 1990, திருவோணம், MS. in Computer Science அழகான பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 28585
- அராலி - இந்து கௌரவகுலம் , 1992, ஆயிலியம். BBA in Canada, கனடா சிற்றிசன், அழகான பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 28891
- ஈச்சமோட்டை - ஊரெழு, இந்து கௌரவகுலம் , 1996, ரேவதி. Bachelor of Nursing, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 27866
- நல்லூர் - மட்டக்களப்பு இந்து கௌரவகுலம், 1984, உத்திரட்டாதி. MBBS, MD, Register அழகான பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 30647
- பருத்தித்துறை - சாவகச்சேரி இந்து கௌரவகுலம் 1985, ஆயிலியம், MSc in Computer Science பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை, பதிவெண் - 30637
- யாழ்ப்பாணம் - இந்து, கௌரவகுலம் 1989, உத்தராடம், Optician, UK Citizen Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 30571
- காரைநகர் - இந்து, கௌரவகுலம் , 1996, உத்தரம், MBBS, MD, Doctor, USA Citizen அழகான பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- Jaffna Town - இளவாலை, Romancatholic, கௌரவகுலம் MBBS Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 29705

(248)

S.Sharma J.P Astrologer - 077 539 3728 - 077 803 8193


# மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 10 . 1943



இறப்பு 22 . 03 . 2024

## சின்னத்துரை பாலசிங்கம்

இல.56/10 ஆத்திசூடி வீதி கந்தர்மடம் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பாலசிங்கம் அவர்கள் 22.03.2024 வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் கனகேஸ்வரி (சந்திரா) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகரெத்தினம் - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற கோபாலசிங்கம், இந்திராணி அவர்களின் பாசமிகு சகோதரனும் அன்னம்மா அவர்களின் அன்புமிகு மைத்துனரும் ரேணுயா (டென்மார்க்), அனுயா (ஜேர்மனி), செல்வக்குமரன் (லண்டன்), திருக்குமரன் (பிரான்ஸ்), தனுசியா (ஜேர்மனி), பாலச்சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவராஜா (டென்மார்க்), ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), வனுஷா (லண்டன்), தர்சனா (பிரான்ஸ்), சுபாஸ்கரன் (ஜேர்மனி), சாமினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜெஸ்மின், ஜெலினா, மௌலினா, லியோன், டன்சிகா, டனுசன், லக்சிகா, டினுஷன், கர்னி, விகாஷ், அப்சரா, திஷான், லக்ஸ்மிகா, டிநோசன், அனிஸ்ரன், சுஜின்ஸ், அபிஷா, அஸ்வின், பூமிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் (28.03.2024) நாளை வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**56/10 ஆத்திசூடி வீதி,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்,**
**குடும்பத்தினர்**
**076 581 2385**

(254)

# மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 11 . 1946



இறப்பு 26 . 03 . 2024

## திருமதி கணபதிப்பிள்ளை சிவபாக்கியம்

கோவிலாக்கண்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை சிவபாக்கியம் 26.03.2024 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னார் சந்திரசேகர் - பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் துசிகரன் (பிரான்ஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்) கவிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரவதனி, தனலக்சுமி, சிறிகாந்தள் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிர்மலரூபினி (பிரான்ஸ்), புவலோஜினி (பிரான்ஸ்), வசந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கரீஸ் (பிரான்ஸ்), கரினி (பிரான்ஸ்), கனிஷா, நக்ஷயன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (28.03.2024) வியாழக்கிழமை நடைபெற்று பிற்பகல் 2 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக புனமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**தகவல் - பிள்ளைகள்**
**துசிகரன் (மகன் - பிரான்ஸ்),**
**பிரபாகரன் (மகன் - பிரான்ஸ்),**
**கவிதா (மகள்)**

**076 733 6490**

(265)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org